Vlambaram -September 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-09-14 6:46 PM Page 1

கனடாவின் மூத்த தமிழ் இதழ் | விளம்பரம்™ • VLAMBARAM™ | Canada's Oldest Tamil Newspaper




35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca T el: 416-282-8059 www.vlambaram.com




நதி: 35 பாலம்: 18 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் SEPTEMBER 15, 2025

# மத்திய அரசின் ஐந்து பெரும் திட்டங்கள்

கனடியப் பிரதமர் மார்க் காணி கனடிய தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக மத்திய அரசின் முதல் ஐந்து மிகப்பெரிய திட்டங்களை விரைவுப்படுத்த உள்ளதாக செப்ரெம்பர் 11, 2025ஆம் திகதி அல்பேட்டா மாகாணத்தில் எட்மென்ரன் நகரில் உள்ள தச்சுத்தொழில் பயிற்சி நிலையத்தில் உரையாற்றும்போது வெளியிட்டார்.

பிரதமர் அங்கு உரையாற்றும்போது, "இந்த நாட்டில் நாங்கள் பெரிய விடயங் களைக் கட்டியெழுப்பினோம். அவற்றை விரைவாகவும் கட்டியெழுப்பினோம். ஆனால், அவை தற்போது பல சிக்கலான அனுமதி பெறும் முறைகளால் முடங்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு திட்டம் ஏன் கட்டப்பட வேண்டும் எனக் கேட்கப்பட்டு சிவப்பு நாடாக்கள் நிறைந்த அனுமதி பெறும் முறைகளால் தடைப் பட்டுள்ளன. இவை எல்லாவற்றையும் மீறி மீண்டும் பெரிய விடயங்களை விரைவாகக் கட்டியெழுப்பத் தொடங்க வேண்டிய நேரம் வந்துள்ளது.

நாம் எவ்வாறான திட்டங்களை உருவாக்க வேண்டும்? அவற்றை எப்படி பெரிய திட்டங்களாகச் செய்ய முடியும்? அவற்றை எப்படி வேகமாகச் செய்ய முடியும்? என கனடாவின் புதிய அரசாங்கம் தம்மைத் தாமே கேட்டுக் கொள்வதன்மூலம் கனடிய தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான பெரிய திட்டங்களுடன் தயாராகிறது." என்று கூறினார். அதன்பின்னர் மத்திய அரசின் முதல் ஐந்து பெரிய திட்டங்களையும் வெளியிட்டார்.

* ஒன்றாரியோ மாகாணத்தில் Clarington என்ற இடத்தில் உள்ள Darlington புதிய அணுசக்தித் திட்டத்தின் விரிவாக்கம்.

* பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் Kitimat என்ற இடத்தில் உள்ள திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு உற்பத்தி நிலையத்தில் (LNG கனடா) திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு உற்பத்தியை இரண்டு மடங்காக்குதல்.

* பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் வடமேற்குப் பிரதேசத்தில் உள்ள Red Chris சுரங்கத்தை விரிவாக்குதல்.

* சஸ்கச்சுவான் மாகாணத்தில் உள்ள Nellvenna Bay Foran செப்பு சுரங்கத் திட்டத்தின் விரிவாக்கம்.

* குவிபெக் மாகாணத்தில் உள்ள மொன்றியல் துறைமுகத்தை Contrecoeur Terminal கொள்கலன் திட்டத்திற்காக விரிவுப்படுத்துதல்.

இந்த ஐந்து பெரிய திட்டங்களையும் வெளியிட்ட பின்னர் கனடியப் பிரதமர் "இந்த ஐந்து திட்டங்களும் இணைந்து கனடியப் பொருளாதாரத்திற்கு $60 பில்லியனுக்கும் அதிகமான வருமானத்தை ஈட்டித்தரும். அத்துடன் பல்லாயிரக் கணக்கான எமது தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் தரும் தொழில்களை உருவாக்கும். இந்த ஐந்து திட்டங்களும் ஓர் ஆரம்பம் மட்டுமே" என்றார்.




Prime Minister Mark Carney at Edmonton, Alberta
Thanks: David Bloom/Postmedia

இந்த ஐந்து பெரிய திட்டங்களும் தேசிய நலனுக்கானதாகக் கருதப்படும் திட்டங் களின் வளர்ச்சியை விரைவுப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு கல்கரியைத் தளமாகக்கொண்டு இயங்கும் புதிய "பெரிய திட்டங்கள் அலுவலகம்" (Major Projects Office) மூலம் விரைவுப்படுத்தப்படும்.

"பெரிய திட்டங்கள் அலுவலகத்திற்கு (MPO) இந்த ஐந்து பெரும் திட்டங்களையும் பரிந்துரைப்பதன் மூலம் இத்திட்டங்களின் முதலீட்டாளர்கள் தற்போது அனுமதி கிடைக்காமல் இருக்கும் சிக்கலான ஒழுங்கு முறைகளை விரைவுப்படுத்தி அரச ஒப்புதலைப் பெற்றுக் கொடுப்பதுடன் அதற்குத் தேவையான அரச நிதியையும் இவ் MPO அலுவலகம் பெற்றுக் கொடுக்கும். இதனால் இந்த ஐந்து திட்டங்களும் விரைவில் தேவையான அரச அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளும். இத் திட்டங்களை விரைவுபடுத்த வழங்கப்படும் அரச நிதி தனியார்துறை முதலீடுகளை அதிகமாகக் கிடைக்க வழிவகுக்கும்" என்று மார்க் காணி ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

கனடியப் பிரதமர் மத்திய அரசின் முதல் ஐந்து பெரும் திட்டங்களை வெளியிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அல்பேட்டா மாகாண முதல்வர் டானிஎல் ஸ்மித் (Danielle Smith), "கனடிய மத்திய அரசின் வளர்ச்சியை விரைவுப்படுத்தும் நோக்கத்துடன் அறிவிக் கப்பட்ட முதல் தொகுதித் திட்டங்களில் நம்பிக்கைக்குரிய அறிகுறிகளைக் காண்கிறேன்" என்றார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அல்பேட்டா மாகாண முதல்வர், "இந்தப் பட்டியலைப் பார்த்த பின்னர் தற்போது ஒட்டாவாவில் உள்ள மத்திய அரசின் தலைவர்கள் நாட்டின் நிலைமையை இப்போது புரிந்து கொண்டுள்ளனர் என்று தெரிகிறது. ஐஸ்ரின் ரூடோ கால அரசியல் கொள்கையில் இருந்து தற்போது மத்திய அரசில் மாற்றம் ஏற்பட்டுள்ளது எனக் காட்டுகிறது. இதனால் தற்போதைய கனடிய மத்திய அரசின் செயல்பாட்டில் நம்பிக்கையை இழக்க வேண்டாம் என அல்பேட்டா மக்களை நான் ஊக்குவிக்கிறேன். நாம் அனைவரும் ஒன்றாகச் செயல்படுவோம். அதனால் ஒன்றாக வலுவாக இருப்போம். கனடியப் பிரதமரை இம்முறை நான் சந்தித்த போது கனடிய மத்திய அரசின் எந்தப் பிரதமருடனான சந்திப்பையும்விட தற்போதைய பிரதமரான மார்க் காணியின் சந்திப்பில்தான் அல்பேட்டா மாகாண அரசிற்கும் கனடிய மத்திய அரசிற்கும் இடையேயான அதிக ஒற்றுமையான நிலைகள் இருப்பதைக் கண்டறிந்தேன்" என்று கூறினார்.

கனடியப் பிரதமருடனான நேரடிச் சந்திப்பின் பின்னர் அல்பேட்டா மாகாண முதல்வர் சமூக ஊடகங்களில் "இன்னும் விடயங்கள் விரிவாக ஆராயப்படாவிட்டா லும் அல்பேட்டா மக்களின் பிரச்சினைகள் தற்போதுதான் மத்திய அரசால் கேட்கப்படுகிறது" என்று வெளியிட்டிருந் தார். இதேபோல் அல்பேட்டா மாகாண முதல்வருடனான நேரடிச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் உரையாற்றிய கனடியப் பிரதமர், "டானிஎல் ஸ்மித் உடன் ஒரு சிறந்த கலந்துரையாடலை நடத்தினோம். அதில் பல முன்னேற்றகரமான விடயங்கள் பேசப்பட்டன. வரும் கிழமைகளிலும் நாம் தொடர்ந்து முன்னேற்றகரமான பல விடயங்களைக் கலந்துரையாடுவோம்" என்றார்.

கனடிய மத்திய அரசால் அங்கீகரிக்கப் படும் முதல் திட்டங்களில் எண்ணெய்க் குழாய் பாதை அமைத்தலும் இருக்க வேண்டும் என முன்னர் அல்பேட்டா பிரதமர் வலியுறுத்தி வந்திருந்தார். அவர் எண்ணெய் மண்ணிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயை பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் வடக்குப் பகுதியால் கொண்டு செல்ல எண்ணெய்க் குழாய் பாதை அமைக்க வலியுறுத்தி வந்திருந்தார். ஆனால், இந்த எண்ணெய்க் குழாய் பாதை அமைக்கும் திட்டம் கனடிய மத்திய அரசின் முதல் ஐந்து பெருந்திட்டங்களில் இல்லா விட்டாலும் அல்பேட்டா முதல்வர் மத்திய அரசின் நிலைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

அல்பேட்டா முதல்வர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது, "எண்ணெய்க் குழாய் பாதை அமைப்பதற்கு நிலைமைகள் சரியாக வந்தால்த்தான் தனியார் இத்திட்டத்தில் முதலீடு செய்வார்கள் என்ற யதார்த்த நிலை எனக்குத் தெரிகிறது. அதற்கு முதலில் சிவப்பு நாடாக்கள் நிறைந்த சிக்கலான அனுமதி பெறும் முறைகள் நீக்கப்பட்டு முதலீட்டார்களின் நம்பிக்கையை மேம்படுத்த வேண்டும். இது "கோழியா முட்டையா முதல் வந்தது" போன்ற மாதிரி யான ஒரு நிலையில் இருக்கிறது. எண்ணெய்க் குழாய் பாதை அமைக்க தொழில் நிறுவனங்கள் உற்பத்தியை அதிகரிக்க உறுதி அளிக்க வேண்டும்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்









# House for Sale / Lease / Condo / BSMT

## Free Hold TH Sale

* 4 Bed Room
* 3 Washroom
* Basement finished & Kitchen
* Separate Entrance
* Completely Renovated
* Easy Access to Hwy, TTC, Schools

(Finch & Pharmacy)

Asking, Call.. George Paranthaman **
Call : 416 277 9044

## Condo for Rent

- 2 Bed Room Condo
- 2 Full Washrooms
- Newly Painted
- 2 Parking

Walking Distance to Kennedy Subway

Day care in the Building

Kennedy / Eglinton

Tisi Para **
Call : 647 296 0596

## Detached Home for Sale

3 Bed Room Renovated
(West Rouge Neighbour hood - Toronto)

Walk to Beach....
Go Station
and TTC

Please Call.......
Amal Joseph*
Call : 416 300 8294

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2

Tel: 416-321-6969

* Sales Rep.
** Broker

* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

Vlambaram -September 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-09-14 6:46 PM Page 4



# செல்லப்பிள்ளையின் அதிருப்தி

**– அரவின் –**

அமெரிக்காவின் செல்லப்பிள்ளை எனக் கருதப்பட்டவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. அவர் இப்பொழுது அமெரிக்காவின்மீது அதிருப்தி அடைந்திருக்கிறார் போலத் தெரிகிறது.

அண்மையில் என்பிபி அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டபோது, அவருக்காக அமெரிக்காவோ அல்லது வேறு எந்த நாடோ குரல் கொடுக்கவில்லை.

அவரது கைதை தடுத்து நிறுத்தவில்லை. அல்லது அவர் விளக்கமறியலில் வைக்கப்படுவதைத் தடுக்க முற்படவில்லை, விளக்கமறியலில் வைக்கப்பட்டபோது அவரை விடுதலை செய்யுமாறு அழுத்தங்களையும் கொடுக்கவில்லை.

அமெரிக்கா இவ்வாறு தன்னைக் கைவிடும் என்று ரணில் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் அமெரிக்காவைப் பொறுத்தவரையில், ரணில் விக்ரமசிங்க சிக்கிக் கொண்ட குற்றச்சாட்டு சிக்கலானது. அவர் ஊழல் அல்லது மோசடிக் குற்றச்சாட்டிலேயே கைது செய்யப்பட்டார். அவர் அரசாங்கப் பணத்தைத் தவறாக செலவு செய்ததாகவே குற்றம் சாட்டப்பட்டு இருந்தார். இதனால், அதற்கு எதிராக அமெரிக்கா குரல் கொடுப்பது சாத்தியமற்றதாக இருந்தது. இது ரணிலுக்குப் புரியாமல் போனது ஆச்சரியம்.

ரணில் விக்ரமசிங்க ஆட்சியில் இருந்தபோதே அமெரிக்கா, இலங்கையின் நீதித்துறையைப் பலப்படுத்துவதற்கு பல மில்லியன் டொலர்களைச் செலவிட்டது. ஊழல் ஒழிப்பு தொடர்பாக நீதித்துறை அதிகாரிகளுக்கும் விசாரணை அதிகாரிகளுக்கும் பயிற்சிகளை அளித்தது.

நீதிமன்றக் கட்டமைப்புகளையும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் கட்டமைப்புகளையும் வலுப்படுத்துவதற்கு உதவிகளையும் பயிற்சிகளையும் வழங்கியது.

இப்போது, அந்தக் கத்தியை வைத்துத்தான், அனுர அரசாங்கம், ரணில் விக்ரமசிங்கவின்மீது கூர் தீட்டிப் பார்த்திருக்கிறது.

ரணில் விக்ரமசிங்கவுக்காக அமெரிக்கா மாத்திரமல்ல இந்தியாகூட வாய் திறக்கவில்லை. இது அவருக்குக் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.



மூன்றாவது நாளே பிணையில் விடுவிக்கப்பட்டு விட்டாலும், இரண்டு நாட்கள் மருத்துவமனையில் தங்கிவிட்டே வீட்டுக்குத் திரும்பி இருக்கிறார். வீட்டுக்குத் திரும்பிய கையோடு அவர் எதிர்க்கட்சித் தலைவர்களை ஒருங்கிணைத்து, ஐக்கிய தேசியக் கட்சியை மீளவும் கட்டி எழுப்புவதற்குத் திட்டமிட்டார்.

அதற்காக கடந்த 6ஆம் திகதி கட்சியின் மாநாட்டை நடத்தவும் திட்டமிடப்பட்டது.

அந்த மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன போன்றோரையும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவையும் ஒன்றிணைக்க முயற்சித்தார். ஆனால், அந்த மாநாட்டை அவரால் நடத்த முடியாமல் போயிருக்கிறது. அது 21ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க இதய நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார், உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டும் என நீதிமன்றத்தில் காரணங்கள் சொல்லப்பட்டே பிணை அனுமதி பெறப்பட்டது.

சில நாட்கள் கழித்து அவர் கட்சியின் மாநாட்டை நடத்தியிருந்தார், ரணில் நாடகமாடினார் என்ற கருத்து மக்கள் மத்தியில் உருவாகியிருக்கும். அதனால்தான் மாநாடு பிற்போடப்பட்டது. இச்சூழலில், நேபாளத்தில் ஏற்பட்டு இருக்கின்ற ஆட்சிக் கவிழ்ப்புக் குறித்து ரணில் விக்ரமசிங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் அவர் அமெரிக்காவுக்குச் சொந்தமான சமூக ஊடக நிறுவனங்கள் உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்களை கவிழ்ப்பதற்கு உருவாக்கும் வாய்ப்புகளைக் குறைத்து மதிப்பிட முடியாது என்று கூறியிருக்கிறார். இந்தச் சம்பவங்கள் ஆபத்தானவை என்றும் அவர் எச்சரித்திருக்கிறார்.

தெற்காசியாவில் முதலில் இலங்கையிலும் அடுத்து பங்களாதேஷிலும் தற்பொழுது நேபாளத்திலும் ஆட்சிக் கவிழ்ப்புகள் அரங்கேறியிருக்கின்றன. இந்த ஆட்சிக் கவிழ்ப்புகளில் சமூக ஊடகங்கள் கணிசமாக பங்காற்றி இருக்கின்றன.

சமூக ஊடகங்களின் ஊடாகவே போராட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. இந்த ஆட்சிக் கவிழ்ப்புகளின் அடிப்படை நோக்கம் ஆபத்தானது என ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டி இருக்கிறார்.

அமெரிக்க ஊடகங்களின் ஆதிக்கத்தையும் அவர் கடுமையாக எதிர்த்திருக்கிறார். இது அமெரிக்காவுக்கு எதிராக அவர் திரும்பி இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

அனுரகுமார திசாநாயக்க அரசாங்கம் முன்னர் சீனாவுக்கு நெருக்கமானது எனக் கருதப்பட்டது. ஆனால் அது சீனாவுக்கு நெருக்கமாக இருந்துகொண்டே, அமெரிக்காவின் தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுக்கத் தொடங்கியிருக்கிறது. அமெரிக்காவின் நம்பகமான பங்காளராக மாறத் தொடங்கியிருக்கிறது. இது ரணில் விக்ரமசிங்கவுக்கு எரிச்சலையும் கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. அதனால்த்தான் அமெரிக்கா தனக்காக இறங்கவில்லை என்ற கருத்து அவருக்குத் தோன்றியிருக்கிறது.

ரணில் விக்ரமசிங்கவைப் பொறுத்தவரையில் அரசியலில் ஆழத்தை முழுமையாக அறிந்தவர். அப்படி இருந்தும் அவர் அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார் என்றால், அது சாதாரணமான விடயம் அல்ல.

அமெரிக்க சமூக ஊடக நிறுவனங்கள் இப்பொழுது உலகத்தை ஆட்டிப் படைக்கத் தொடங்கி இருக்கின்றன. இதற்கு இலங்கையும்கூட பலிக்கடா ஆகியது.

அமெரிக்க சமூக ஊடகங்களின் ஆட்சி மாற்றம் துனீசியாவில் தொடங்கியது. அதன் விளைவாக அரபுலக வசந்தம் என, அழைக்கப்பட்ட புரட்சி பரவியது. அதன்பின்னர், 2022ஆம் ஆண்டு இலங்கையில் அரகலய போராட்டம் உருவெடுத்து, கோட்டாவின் ஆட்சியையும் அரசியலையும், இல்லாமல் ஆக்கியது.

பங்களாதேஷின் ஷேக் ஹசீனா அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கும் சமூக ஊடகங்கள் கணிசமான பங்காற்றி இருந்தன. இப்பொழுது நேபாளத்தில் சர்மா ஒலியின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சூழலை ஆபத்தான ஒன்றாக அடையாளப்படுத்தி இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க, இலங்கையில் கடந்த ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்கும் அதுவே காரணம் என நினைக்கிறார் போலத் தெரிகிறது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதற்கு சமூக ஊடகங்கள் ஒரு காரணமாக இருந்திருக்கின்றன.

மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தொடர்பாக இருந்து வந்த விமர்சனங்கள், மாற்றம் குறித்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்திய சமூக ஊடகங்கள் என்பன இதில் தாக்கம் செலுத்தியிருந்தன.

ஒரு பக்கத்தில் அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் எதிர்க்கட்சிகளின்மீது கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்துக்கொண்டு, மற்றொரு பக்கம் தங்களின் அதிகாரத்தை நிலைப்படுத்துவதில் ஈடுபட்டு இருக்கிறது.

தங்கள் கட்சியின் மீதான விமர்சனங்கள் குற்றச்சாட்டுகளைப் பற்றிய விசாரணைகளை மூடி மறைத்துக்கொண்டு, எதிர்த் தரப்புகளைப் பலவீனப்படுத்தும் விசாரணைகளை முன்னெடுக்கத் தொடங்கி இருக்கிறது.

பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் தோற்கடிப்பதற்குப் பதிலாக, சபாநாயகர் மூலம் அதனை நிராகரிக்கச் செய்து என்பிபி அரசாங்கம், தனது சுயரூபத்தைக் காட்டியிருக்கிறது.

இனவாதமற்ற அரசு-நியாயமான அரசு என தன்னைத்தானே கூறிக்கொண்ட என்பிபி அரசாங்கத்தினால், வெளிப்படையான, பொறுப்புணர்வான, நம்பகமான ஓர் அரசாங்கமாகச் செயற்பட முடியவில்லை.

அதுவும் தண்டனை விலக்கு கலாசாரத்தையே பின்பற்றத் தொடங்கியுள்ள நிலையில், எப்படி மாற்றத்தை உருவாக்க முடியும்?

விளம்பரம் VLAMBARAM™
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved



# மத்திய அரசின் ....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆனால், தற்போதைய சூழ்நிலையில் அது நடக்காது. என்றாலும் முதலீட்டாளர்களை மேசைக்குக் கொண்டு வந்து எம்முடன் கலந்துரையாட நாம் தீவிரமாகச் செயற்படப் போகிறோம். அதற்கு மத்திய அரசு சிக்கலான அனுமதி பெறும் முறைகளை நீக்க வேண்டும். மத்திய அரசு தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள முதல் ஐந்து பெரும் திட்டங்களில் இந்த சிக்கலான அனுமதி பெறும் முறைகள் நீக்கப்படுவதன்மூலம் நாம் சில



Alberta Premier Danielle Smith Thanks: Gavin Young/Postmedia

ஆதரவாளர்களின் நம்பிக்கையைப் பெறுவதன்மூலம் அவர்களை எண்ணெய்க் குழாய் பாதை அமைக்கும் திட்டத்தில் முதலிட வைக்கலாம்” என்றார்.

கனடியப் பிரதமர் மத்திய அரசின் ஐந்து பெரும் திட்டங்களை வெளியிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பழமைவாதக் கட்சியின் தலைவர் பியர் பொலியவ் இத்திட்டங்கள் பரிதாபகரமானது (Pathetic) என்றார். அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில், “இன்று மார்க் காணி செய்தது என்னவென்றால், இதுவரையும் பணியாட்களை முழுமையாக நியமிக்காத ஓர் அலுவலகமான MPOஇற்கு ஒரு மின்னஞ்சல் மூலம் ஐந்து திட்டங்களை அனுப்பி அந்த அலுவலகம் செயற்படத் தொடங்கிய பின்னர் இந்த ஐந்து திட்டங்களையும் விரைவுபடுத்த கருத்தில் கொள்ளுமாறு கூறியுள்ளார். இந்நிலைமை பரிதாபகரமானது. இதற்குப் பதிலாக இந்த MPO அலுவலகத்தைக் கலைத்துவிட்டு வரும் இலையுதிர்காலத்தில் பழமைவாதக்கட்சி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ள ‘இறையாண்மைச் சட்டத்தை’ ஆதரித்து நிறைவேற்ற வேண்டும்” என்றார்.



Pierre Poilievre Thanks: The Guardian

பழமைவாதக்கட்சி வரப்போகும் இலையுதிர் காலத்தில் லிபரல் அரசின் எண்ணெய்க்குழாய் பாதை மற்றும் சுரங்கங்கள் அமைக்க சாத்தியமற்ற தாக்கிய சட்டமூலம் C-69, கனடிய மேற்குக் கரைக்கு எண்ணெய்க் கொள்கலன் செல்வதை சாத்தியமற்ற தாக்கிய சட்டமூலம் C-48, அனைவருக்கும் செலவுகளை அதிகரிக்க வைத்த தொழில்துறை காபன் வரி,



வேலைகளை இல்லாமல் செய்த எண்ணெய் மற்றும் எரிவாயு வரம்பு மற்றும் பிளாஸ்ரிக் தடை போன்றவற்றை நீக்குமாறு கூறி ‘இறையாண்மைச் சட்டமூலம்’ ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளது.



Thanks: CBC News

பழமைவாதக்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில், “லிபரல் அரசு தெரிவித்துள்ள ஐந்து பெரும் திட்டங்களும் விரைவுப்படுத்தப்பட வேண்டியவைதான். லிபரல் அரசு அமல்படுத்திய பொருளாதார வளர்ச்சிக்கு எதிரான சட்டங்களை நீக்குவதன் மூலமும், இத்திட்டங்களை அமைக்க இயலாமல் லிபரல் அரசு கொண்டு வந்த வரிவிதிப்புகளை நீக்குவதன் மூலமும் இந்த ஐந்து பெரும் திட்டங்களும் விரைவுப்படுத்தப்படும். இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒட்டாவாவிற்கு ஒரு புதிய அதிகாரமோ அல்லது நடைமுறைப்படுத்த வேண்டிய பெரும் திட்டங்கள் என்று ஒரு கனவுப் பட்டியலோ (Dream List) மத்திய அரசிற்குத் தேவையில்லை. மத்திய அரசு முதலீட்டாளர்களுக்கு முட்டுக்கட்டையாக இல்லாமல் வழியைவிட்டு விலகினாலே போதும். நாட்டுக்கு வேண்டிய எல்லா பெரிய திட்டங்களும் தானாகவே அமல்படுத்தப்படும்” என்றார்.

‘Greenpeace Canada’ நிறுவன அதிகாரி Keith Stewart ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், “நாடு முழுவதும் உள்ள கனடியர்களைப் பாதிக்கும் காலநிலை மாற்றத்திலிருந்து பாதுகாப்பு வழங்கும் திட்டங்களை உள்ளடக்கிய வீட்டு வசதி, வாழ்க்கைச் செலவு, சுகாதார பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை முன்னேற்றும் கனடிய தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டங்களுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றார்.

CBC ஊடகத்திற்கு பேட்டியளித்த கனடியப் பிரதமர் மார்க் காணி தற்போது மத்திய அரசு வெளியிட்டது முதல் ஐந்து பெரும் திட்டங்களை மட்டுமே மத்திய அரசு மேலதிக திட்டங்களையும் விரைவு படுத்தும் என்றும் அவை விரைவில் MPO அலுவலகத்திற்கு விரைவுப்படுத்து வதற்காகப் பரிந்துரைக்கப்படும் என்றார்.



Carney recommends 5 Nation building projects Thanks: CBC News

மார்க் காணி CBC ஊடகத்திற்குத் தெரிவித்த 7 பெரும் திட்டங்கள்:

1) அட்லாண்டிக் கனடாவில் காற்றாலை சக்தியை உருவாக்கும் "Wind West Atlantic Energy" நிறுவனத்தை விரிவாக்கல்.

2) அல்பேட்டா மாகாணத்தில் காபனை நிலத்திற்குக் கீழ் அடைத்து வைக்கும் திட்டம் மற்றும் குழாய்த் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் Pathways Plus நிறுவனத்தை விரிவாக்கல்.

3) ஆட்டிக் (Arctic) பொருளாதார மற்றும் பாதுகாப்பு வழித்தடம் விரிவாக்கம்.

4) மனிற்ரோபா மாகாணத்தில் உள்ள Churchill துறைமுகத்தை மேம்படுத்தல்.

5) கனடாவின் வடக்கில் எல்லா காலநிலையையும் தாங்கும் போக்குவரத்து சாலை உள்கட்டமைப்பு அமைத்தல்.

6) குவிபெக் நகரத்திற்கும் ரொறொன்ரோ நகரத்திற்கும் இடையே Alto அதிவேக தொடருந்து வழித்தடம் அமைத்தல்.

7) இவற்றுடன் முக்கியமான கனிமவளத் திட்டங்களில் முதலீடு செய்வதற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் முடிவுகள் எடுக்கப்படும். இந்த கனிமவளத்திட்டங்களில் பின்வரும் 3 இடங்கள் அடங்கும்.

* ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள நெருப்பு வளையம் (Ring of Fire) பகுதி.
* வடமேற்கு பிரதேசத்தில் உள்ள Slave Geological Area.
* குவிபெக் மாகாணமும் லாபரடோரும் (Labrador) பகிர்ந்து கொள்ளும் பிரதேசமாகிய Labrador Trough பகுதி.



Grey Cup Thanks: Bret Kentworthy

கனடியப் பிரதமர், முதலாவது தொகுதி ஐந்து பெரும் திட்டங்களும் MPO அலுவலகத்திற்கு செப்ரெம்பர் 11, 2025 இல் பரிந்துரைக்கப்பட்டது. இரண்டாவது தொகுதி பெரும் திட்டங்கள் MPO அலுவலகத்திற்கு கனடிய கால்பந்து கழகம் (Canadian Football League) நடத்தும் இறுதிப் போட்டியான Grey Cup போட்டி நடைபெறும் தினத்திற்கு (நொவெம்பர் 16, 2025) முன்னர் பரிந்துரைக்கப்படும் என CBC ஊடகத்திற்குத் தெரிவித்தார்.

# ஊன் உணவகம்



Organ Donation Week 2025
September 19 - September 25

சொல்லாமல் எதுவித
அறிவித்தல் கொடுக்காமல்
கதவைத் தட்டாமல்
தானாக நுழைகின்ற இயற்கை
விதிமுறை நோயும், மரணமும்

முயன்று தோற்று விரக்தியடைந்து
தோற்று முயன்று வெற்றி பெற்று
சதம் கோடியாகின்றது
கோடிகள்
பாலைவன நிலத்து மண்ணசைவாக
காற்றடிக்கும் திசைகளில் ஒதுங்குகின்றன

வானவில் வாழ்க்கையில் நிறங்கள்
அழகியல் மயக்கம் காட்டுகின்றன

பிறந்த வாசல் புரிகின்றது
போகும் வாசல் தெரியவில்லை

அவசர வாழ்க்கைச் சூழலில் பெற்றதாயை,
பேணி வளர்த்த தந்தையை ஆதரிக்க,
கவனிக்க முடியவில்லை

உள்ளே பல வகையில்
உயிர்வாடுகின்றது ஆனால்
மாயை உபரி ஆசையில்
பொருள் போகம் கண்ணை மறைக்கின்றது

பிறப்பு நான்கு எழுத்து
இறப்பு நான்கு எழுத்து
கழித்துப் பார்த்தால் பெறுபேறு
பூஜ்ஜியம்தான்.

கொண்டு வந்தது ஒன்றுமில்லை
கொண்டு போவதற்கும் எதுவுமில்லை

மனம் தெளிந்த விருப்பிருந்தால்
உறுப்புத்தானம் செய்யலாம் இல்லையேல்
மருத்துவக் கல்லூரிக்கு
முழு உடலையும் கொடையாக்கலாம்

தீ தனக்கென்கிறது
மண் தனக்கென்கிறது
நாய் நரி தமக்கு என்கின்றன
புழு தனக்கென்கிறது
கடலில் நீர்நிலைகளில் மூழ்கிவிடின்
மீன்கள் முதலைகள் தமக்கு என்கின்றன

இந்த நடமாடும் மனித உணவகத்தை!



முத்துராஜா

Vlambaram -September 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-09-14 6:46 PM Page 6



# செம்மணியைத் தவிர்த்த அனுர

## – முகிலன் –

அனுரகுமார திசாநாயக்க இலங்கையின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு அடுத்த வாரத்துடன், ஒரு வருடம் நிறைவு பெறப்போகிறது.

ஏராளமான வாக்குறுதிகளுடன் ஆட்சிக்கு வந்த அவர் அந்த வாக்குறுதிகளை, நிறைவேற்றுவதற்கான அடிப்படைகளைக் கூட ஏற்படுத்தாத சூழ்நிலையில், ஒரு வருட காலத்தை பூர்த்தி செய்யும் நிலையில் இருக்கிறார்.

ஆட்சிக்கு வரும்வரையில், நாட்டில் இருந்த பிரச்சினைகளை வரிசைப்படுத்தி, அவற்றுக்கெல்லாம் தீர்வு காணப்படும் எனக் கூறிய அவர், ஆட்சிக்கு வந்த பின்னர், பொருளாதாரப் பிரச்சினையை தீர்ப்பதே முதலாவது வேலை என்றும், அதனைச் செய்த பின்னரே அடுத்தடுத்த பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் எனவும் கூறி அனைவரது வாயையும் அடைத்து விட்டார்.

ஒரு வருடத்தை நிறைவு செய்யும் நிலையில், இப்போது தமது அரசாங்கம் செயற்படுகிறது என்று காட்ட வேண்டிய நிலையில் அவர் இருக்கிறார். அதற்காக, அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களை வடக்கில் இருந்து தொடங்கி இருப்பதாக தேசிய மக்கள் சக்தி அமைச்சர்கள் கூறுகின்றனர்.

ஜனாதிபதி அனுர, மண்டைதீவில் கிரிக்கெட் மைதானம் ஒன்றுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார், வட்டுவாகல் பாலத்தை புனரமைக்கும் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்திருக்கிறார், யாழ்ப்பாணத்தில் கடவுச் சீட்டு விநியோகிக்கும் அலுவலகத்தை திறந்து வைத்திருக்கிறார்.

இவ்வாறான சில வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக இந்த மாதத் தொடக்கத்தில் அவர் வடக்கிற்கு பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தின் போது அவர் செம்மணி புதைகுழியைப் பார்வையிடக்கூடும் என அமைச்சர் சந்திரசேகர் கூறியிருந்தார். ஆனால், செம்மணிப் புதைகுழி அமைந்திருந்த வீதியால் சென்றிருந்த போதும், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, அதனை எட்டியும் பார்க்கவில்லை.

அதேவேளை, செம்மணிப் புதைகுழியில் இருந்து, இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வில், 240 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

மேலும் எட்டு வாரங்கள் அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என, அகழ்வுப் பணிகளில் ஈடுபட்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் நீதிமன்றத்துக்கு பரிந்துரைத்துள்ளனர். அதற்கான நிதி கிடைக்கும்வரை, இந்த அகழ்வு இடைநிறுத்தப்பட்டிருக்கிறது.

நிதி கிடைப்பதற்குள், மாரி காலம் ஆரம்பித்து விடும். மழைபெய்ய ஆரம்பித்தால் செம்மணிப் புதைகுழி, பிரதேசம் தண்ணீரில் மூழ்குகின்ற ஆபத்து இருக்கிறது. அதனைத் தாண்டி அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதாயின் கடும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும். அது அகழ்வு நடவடிக்கையை தாமதப்படுத்தும். அதிக செலவுகளையும் ஏற்படுத்தும்.



செம்மணிப் புதைகுழியை அகழ்வதற்கும் அது சார்ந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறிக் கொண்டாலும், இதற்கான நிதி ஒதுக்கீட்டை முன்கூட்டியே மேற்கொள்வது உள்ளிட்ட பணிகளை அரசாங்கம் முன்னெடுத்திருக்கவில்லை. அதைவிட இன்னமும் அரசாங்கம் செம்மணிப் புதைகுழிகள் குறித்து, குற்றப் புலனாய்வுத் துறையின் ஊடாகவே விசாரணைகளை முன்னெடுக்கிறது. ஆனால் குற்றப்புலனாய்வுத்துறை என்பது தமிழ் மக்களால் நம்பக்கூடிய ஒரு கட்டமைப்பு அல்ல. அது பாரபட்சமாக செயற்பட்டிருக்கின்ற ஓர் அரச புலனாய்வு அமைப்பு. இது, ஆயிரக்கணக்கான தமிழரை சிறைக்குள் தள்ளுவதற்குக் காரணமாக இருந்திருக்கிறது.

எந்த அடிப்படை ஆதாரங்களும் இல்லாமல் சந்தேகத்தின் அடிப்படையில், பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தியும் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தியும் சிறைக்குள் தள்ளுவதற்கு காரணமாக இருந்த அமைப்பு.

அப்படிப்பட்ட ஓர் அமைப்பின் கையில் தான் செம்மணிப் புதைகுழிகளை விசாரிக்கின்ற பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. செம்மணி புதைகுழிகள் தொடர்பாக நியாயமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமானால், அது சுயாதீனமானதாகவும் சர்வதேச தரத்தைக் கொண்டதாகவும், இருக்க வேண்டும் என எல்லா தரப்புக்களும் வலியுறுத்துகின்றன. தமிழர் தரப்பில் சர்வதேச விசாரணையே முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த காலங்களில் செம்மணிப் புதைகுழிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் அப்படியே கிடப்பில் போடப்பட்டு மூடப்பட்டதற்குக் காரணம் உள்ளக விசாரணைதான்.

1999ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட 15 எலும்புக்கூடுகள் தொடர்பான முழுமையான விசாரணைகள் கைவிடப்படுவதற்கு அதுவே காரணம்.

மீண்டும் அவ்வாறான ஒரு சம்பவம் நிகழ்ந்து விடக்கூடாது என்பதால்தான், சர்வதேச விசாரணைமூலம் தீர்வு காணப்படவேண்டும் என வலியுறுத்தி தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



எவ்வாறாயினும் இலங்கை அரசாங்கம் அதற்கு இணங்குவதாக இல்லை.

ஜெனிவாவில்கூட இந்தக் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்திருக்கிறது.

வடக்கிற்குப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, செம்மணிப் புதைகுழியைப் பார்த்திருக்கலாம், அதுதொடர்பான ஒரு வாக்குறுதியைக் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கலாம். ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை. ஏற்கனவே, தையிட்டியில் சட்டவிரோமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை தொடர்பான விவகாரத்திலும், அவர் இதுபோல நழுவல் போக்கிலேயே செயற்பட்டிருந்தார்.

ஜனாதிபதி தனது வடக்கு பயணத்தின் போது, மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை ஆரம்பித்து வைத்திருந்தார். அந்த நிகழ்வு நடைபெறும் இடத்தில் இருந்து சற்று தொலைவில்தான், தையிட்டியில் சட்டவிரோதமாக பொதுமக்களின் காணிகளை அபகரித்து திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த விகாரையை அகற்றி தமது நிலங்களை ஒப்படைக்க வேண்டும் என உரிமையாளர்கள் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் தமது உரித்து ஆவணங்களுடன் மயிலிட்டியில் காத்து நின்றபோது படையினரால் அடித்து விரட்டப்பட்டனர்.

ஜனாதிபதியின் கண்களில் படக்கூட அவர்களை அனுமதிக்கவில்லை. ஆக தமிழ் மக்களின் பிரச்சினைகள் விடயத்தில் தீர்வுகளைச் சொல்லுகின்ற நிலையில் ஜனாதிபதி இல்லை என்பதையே தையிட்டி விகாரை விவகாரமும் செம்மணிப் புதைகுழி விவகாரமும் எடுத்துக்காட்டி இருக்கின்றன. யாழ்ப் பாணத்திற்கு பயணம் மேற்கொண்ட அனுரகுமார திசாநாயக்க, கச்சதீவுக்குப் பயணம் மேற்கொண்டு அது இலங்கைக்கே உரியது என்ற செய்தியை இந்தியாவுக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்.

எந்த ஒரு ஜனாதிபதியும் இதுவரையில் கச்சதீவுக்கு பயணம் மேற்கொள்ளாத நிலையில், அனுரகுமார திசாநாயக்க மேற்கொண்ட இந்தப் பயணம் சர்ச்சைகளையும் கிளப்பியிருக்கிறது.

கச்சதீவை ஒரு சுற்றுலா மையமாக மாற்றுகின்ற திட்டத்தை, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன் வைத்திருக்கிறது. அதற்கு கத்தோலிக்க திருச்சபையின் யாழ்ப்பாண மறைமாவட்ட குரு முதல்வர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறார்.

கச்சதீவு ஒரு புனித யாத்திரை தலமே தவிர சுற்றுலாத்தலம் அல்ல என்று அவர் அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறியிருக்கிறார்.

தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்க, அனுரவின் அரசாங்கமோ மண்டைதீவில் கிரிக்கெட் மைதானம் அமைப்பதில் கவனம் செலுத்துகிறது.

பொருளாதாரப் பிரச்சினைகள்தான் தமிழருக்கு உள்ளது என்று காண்பிப்பதன் மூலம் அது இந்த விவகாரத்தை திசை திருப்பப் பார்க்கிறது.

அதைவிட யாழ்ப்பாணத்திற்குள் ஊடுருவுவதற்கு ஜேவிபி மற்றும் என்பிபி தலைவர்கள் தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

2004ஆம் ஆண்டு சுனாமி பேரழிவுக்குப் பின்னர், வடமராட்சிக்கு வருகை தந்த விமல் வீரவன்ச, டில்வின் சில்வா உள்ளிட்ட குழுவினரை, தமிழ் மக்கள், விளக்குமாறு கொண்டு விரட்டியடித்தனர். இப்போது அவர்கள் வடக்கில் ஆழக் கால்பதிக்கின்றனர்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தனது வடக்குப் பயணத்தின்போது, செம்மணிப் புதைகுழியைப் பார்வையிட நேரம் ஒதுக்கவில்லை. ஆனால் யாழ்ப்பாண நகரில் தனது ஆதரவாளர் வீட்டிலேயே அவர் தங்கியிருந்தார். அங்கேயே உணவு உண்டு உறங்கிச் சென்றிருக்கிறார்.

முல்லைதீவில் ஓர் ஆதரவாளரின் வீட்டுக்குச் சென்று அவரது குழந்தையுடன் நேரத்தைச் செலவிட்டிருக்கிறார். ஆனால் அவரால் செம்மணிப் புதைகுழிக்காக மட்டும் நேரத்தை ஒதுக்க முடியவில்லை.

இதிலிருந்தே அவரது அரசாங்கத்தின் நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

Vlambaram -September 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-09-14 6:46 PM Page 7



# முறைகேடாக பாஜக ஆட்சியைப் பிடித்ததா?

## தேவசகாயம் M.G அவர்களுடனான நேர்காணல்

**நேர்கண்டவர்: கண்ணன்**

இந்தியாவில் 2024ஆம் ஆண்டு நாடாளு மன்றத் தேர்தலில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள ஆதாரங்கள் நாடு முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. "இந்த முறைகேடுகள் மூலமாகவே மோடி மீண்டும் பிரதமராகியுள்ளார். பாஜக மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது" என்ற குற்றச்சாட்டை முன்வைத்து எதிர்கட்சிகள் போராடி வருகின்றன. முன்னரே, 2024 நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன் ஆந்திரா, ஒரிசா மாநிலங்களில் வாக்குப் பதிவில் ஏற்பட்ட மாற்றங்களைச் சுட்டிக்காட்டி நாடு முழுவதும் 80 தொகுதிகளில் தேர்தல் முறைகேடுகள் நடந்திருக்க வாய்ப்புண்டு என முதன் முதலில் சொன்னது 'வோட்ஃபார் டெமாக்ரசி' (Vote For Democracy) அமைப்பு. இந்த அமைப்பின் முக்கிய குரலாக இருந்தவர், முன்னாள் 'இந்திய ஆட்சிப் பணி அதிகாரி'யான, தமிழ்நாட்டைச் சேர்ந்த தேவசகாயம் M.G என்ன நடக்கிறது இந்தியாவில்? தேவசகாயம் M.G அவர்களைச் சந்தித்துப் பேசினோம்.

**கேள்வி: ராகுல் காந்திக்கு முன்பே, 2024 நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடனே இந்தியா முழுவதும் தேர்தல் முறைகேடு நடந்துள்ளது என குரல் எழுப்பியவர் நீங்கள். உங்களுடைய கண்டுபிடிப்புப் பற்றி சொல்ல முடியுமா?**

**பதில்:** இந்தியா முழுவதும் நாங்கள் ஆய்வு செய்து 15 மாநிலங்களில் 80 தொகுதிகளில் முறைகேடு நடந்துள்ளது என்று எச்சரித்தோம். ஏழு தவணைகளில் நடத்தப்பட்ட 2024 தேர்தல்களில், இறுதியாக அறிவிக்கப்பட்ட வாக்கு எண்ணிக்கை, வாக்களிப்பு முடிந்தவுடன் அறிவிக்கப்பட்ட வாக்குப் பதிவு எண்ணிக்கையைவிட, 4.65 கோடி அதிகமாக உள்ளது. முக்கியமாக, ஆந்திரம் மற்றும் ஒரிஸ்ஸா மாநிலங் களில், முறையே 12.54%, 12.48% வாக்கு எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இப்படி, 80 தொகுதிகளில் நடந்துள்ளது. இந்த 80 தொகுதிகளிலும் பாஜக வெற்றி பெற்றுள்ளது.

ஒரிசாவில் 18, மகாராஷ்ட்ராவில் 11, ஆந்திராவில் 7, மேற்கு வங்காளத்தில் 10, கர்நாடகாவில் 6, சட்டீஸ்கரில் 5, ராஜஸ்தானில் 5, பீகாரில் 3, ஹரியானா வில் 3, மத்திய பிரதேசத்தில் 3, தெலுங்கானாவில் 3, அசாம்மில் 2, அருணாச்சல் பிரதேஷில் 1, குஜராத்தில் 1, கேரளாவில் 1. இப்படி 80 தொகுதிகளில் முறைகேடு நடந்துள்ளதைக் கண்டு பிடித்தோம். எங்கள் அறிக்கையில் அதை விளக்கியிருக்கிறோம்.

தேர்தல் நடத்த ஒன்றரை மாதம், இரண்டு மாதம் எடுத்துக்கொள்கின்றனர். தமிழ் நாட்டில் மாத்திரம்தான் ஒரு நாளில் நடந்தது. மற்ற மாநிலங்களில் ஏழு, சில மாநிலங்களில் ஆறு கட்டமாகத் தேர்தல் நடத்தினார்கள். ஆனால், பதிவான வாக்குகளை எண்ணுவதற்கு மாத்திரம் சில மணி நேரத்தில் முடித்துவிட்டார்கள். ஏதோ பெரிய உலக மகா யுத்தம் வரப் போகிறது மாதிரி பயமுறுத்தி எல்லோரை யும் கட்டுப்படுத்தி வாக்கு எண்ணிக்கை நடத்தினார்கள். அப்போதுதான் பெருமளவு முறைகேடு நடந்துள்ளது.

நேர்மையான தேர்தலுக்கான அறிகுறி வெளிப்படைத் தன்மை. ஆனால், இங்கே எல்லாமே தலைகீழாக நடக்கத் தொடங்கியது. இதனால்தான் எங்களுக்கு சந்தேகம் வந்தது. அப்புறம்தான் உட்கார்ந்து நாங்கள் மாநிலம் வாரியாக ஆய்வு செய்ய ஆரம்பித்தோம். ஒரிசாவில் 20 தொகுதிகளில் வாக்குப் பதிவு முடியும் நேரத்தில் ஐந்து, ஆறு மணிக்குப் பின்னர் மட்டும் 40 லட்சம் ஓட்டுகள் பதிவாகி உள்ளது. ஒவ்வொரு தொகுதியிலும் சராசரியாக 2 லட்சம் வாக்குகள் அந்த நேரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்தத் தொகுதிகள் வெற்றி வித்தியாசம் ஒரு லட்சத்துக்கும் கீழான வாக்குகள் தான். இப்படி வெற்றிபெற வைக்கப்பட்ட வர்கள் அனைவரும் பாஜகவினர். அதே மாதிரி ஆந்திராவில், மகாராஷ்ட்ராவில். இப்போது ராகுல்காந்தி கண்டுபிடித்துச் சொல்லியுள்ள கர்நாடகா பெங்களூர் மத்திய தொகுதியும் நாங்கள் கொடுத்த பட்டியலில் இருக்கிறது.



மற்ற நாடுகளில் வாக்குப்பதிவு இயந்திரத்தில் முறைகேடு செய்ய முடியும் என்று கண்டுபிடித்து அந்த இயந்திரத்தை தூக்கி தூரப் போட்டுட்டாங்க. வாக்குச்சீட்டு முறையில் ஓட்டுப் போடுறவங்களுக்குத்தான் யாருக்கு ஓட்டு போட்டுள்ளோம் என்று தெரியும். வாக்குப்பதிவு இயந்திரத்தில் உள்ளே என்ன நடக்கிறது என்று யாருக்கும் தெரியாது. அதனால்தான் விவி பேட்ட ஸ்லிப் கொண்டு வந்தாங்க. இப்போது தேர்தல் ஆணையம் அதை ஒளிச்சுக் கட்டிட்டாங்க. உச்சநீதிமன்றமும் அதை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். நாங்கள் எங்கள் கண்டுபிடிப்புகள் குறித்து அறிக்கையுடன் நிற்காமல் உச்ச நீதிமன்றம்வரை சென்று போராடினோம். ஆனால், எந்த நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை.

இதற்கு முன்பும் இந்தியாவில் தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளது. அது சிறு அளவில் நடக்கும். அதைக் கண்டுபிடித்து விடுவார்கள். இப்போது முறைகேட்டை தடுக்க வேண்டிய, தேர்தலை நடத்தும் தேர்தல் ஆணையமே முறைகேட்டைச் செய்கிறது. இது 2024 தேர்தலில் மட்டுமல்ல 2019 தேர்தலிலும் நடந்துள்ளது. மக்கள் வாக்களித்து அல்ல, முறைகேடு செய்துதான் 2019இலும் 2024இலும் ஆட்சிக்கு வந்துள்ளனர்.

**கேள்வி: "தேர்தல் முறைகேடுகளை வெளியே கொண்டுவர வேண்டியது எதிர்கட்சிகளின் கடமை" என்று சொல்லிருந்தீங்க. இப்போது ராகுல் காந்தி அதைச் செய்திருக்கார். நீங்க எதிர்கட்சி தலைவர்கள் யாரையாவது சந்தித்து இது சம்பந்தமா பேசினீர்களா?**

**பதில்:** நான் ஏன் அவர்களைச் சந்திக்க வேண்டும். ஜனநாயகத்தை காப்பாற்றுவது அரசியல் கட்சிகளோ அரசியல்வாதிகளோ இல்லை. மக்கள்தான் ஜனநாயகத்தைக் காப்பாற்றுகின்றனர். மக்களுக்குத்தான் அந்த உரிமை இருக்கிறது. அரசியல் கட்சிகள் இதைப் பயன்படுத்திக் கொள்பவர்கள். அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி லாபமடைகின்றனர். எனவே, அவர்கள்தான் எங்களிடம் வந்திருக்க வேண்டும். எங்களிடம் அவர்களைவிட நிறையத் தகவல்கள் இருக்கிறது. ஆனால், அரசியல்வாதிகளின் ஆர்வம் வேறு. அவர்கள் சமரசம் செய்து கொள்வார்கள். சரி சரி நமக்கு எப்போது வாய்ப்பு வருமோ அப்போது நாமும் முறைகேடு செய்துகொள்ளலாம் என்று நினைப்பார்கள். அவர்களுக்கு எப்படியாவது பதவி வேண்டும். 2024 தேர்தல் முறைகேடுகளை நாங்கள் வெளியிட்டு ஒரு வருடத்துக்கு மேலே ஆகிவிட்டது. 2019 முறைகேடுகளைச் சொல்லி ஐந்து வருடம் ஆகிறது. எல்லோருக்கும் தெரியும். ஆனால், யாரும் எங்களுடன் பேசவில்லை. இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகளுக்கு உண்மையில் ஜனநாயகம் பற்றி ஆர்வம் இல்லை. அவர்களுக்கு பதவியைக் கைப்பற்ற வேண்டும். அதிகாரத்தில் உட்கார வேண்டும்.

**கேள்வி: தற்போது ராகுல்காந்தி வெளியிட்டுள்ள பெங்களூரு மத்தி தொகுதியில் என்ன நடந்தது?**

**பதில்:** 2024 தேர்தலில் பெங்களூரு மத்தியில் உள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளில் 6இல் காங்கிரஸ், பாஜகவைவிட அதிக வாக்குகள் பெற்று இருந்தது. ஆனால், 7ஆவது சட்டமன்றத் தொகுதியான மகாதேவ்புராவில், பாஜக, காங்கிரஸைவிட 1.14 லட்சம் ஓட்டுகள் (98%) அதிகமாக வாங்கியிருந்தது. இதன் விளைவாக, பெங்களூரு மத்தியில், 32,707 வாக்குகள் வித்தியாசத்தில் பாஜக வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இது பெரும் சந்தேகத்தை எழுப்பியதால், மகாதேவ்புரா சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியலின் மின் நகலைத் தருமாறு தேர்தல் ஆணையத்திடம் வேண்டுகோள் விடுத்தது காங்கிரஸ். தேர்தல் ஆணையம் தர முடியாது என மறுத்து விட்டது. அதற்குப் பதிலாக மகாதேவ்புரா தொகுதியின் மொத்த வாக்காளர் பட்டியலை காகிதமாக, அதுவும் ஸ்கேன் செய்ய இயலாத வண்ணம் கொடுத்தது. மின் நகலைக் கொடுக்க மறுத்தது, ஸ்கேன் செய்ய இயலாத காகிதத் தரவுகளைக் கொடுத்தது போன்ற செயல்கள் தற்செயலானவையல்ல. எவரும் எளிதில், இந்தத் தரவுகளைச் சரி பார்த்து விடக்கூடாது என்னும் நோக்கத்தோடு தேர்தல் ஆணையம் செயல்பட்டிருப்பது இதன்மூலம் வெட்ட வெளிச்சமாகியுள்ளது. தேர்தல் ஆணையம் கொடுத்த மகாதேவ்புரா சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பட்டியல் அலசப்பட்டபோது, அதில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் போலி என்பது கண்டறியப் பட்டது. ஒரே விலாசத்தில் பல

தொடர்ச்சி 08ஆம் பக்கம்



## நாமும் நமது இல்லமும் 685

# கனடாவில் வீடுகளின் விலை குறையுமா?



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

தொழில்புரிவதில், தொழில் கிடைப்பதிலான நெருக்கடிகளாலும், பொருளாதார இறக்கத்தாலும், கனடிய மத்திய வங்கியின் வட்டிவீத நிலைப்பாட்டாலும் ஆதன வியாபாரம் குறிப்பாக அடுக்கு ஆதன வியாபாரம் திசை தெரியாமல் நிலை மாறுகின்றது. மேலதிக அடுக்குமனைகள் சந்தைப்படுத்தப்படுவதாலும் ஆதன வியாபாரம் குறைகின்றது அல்லது அடுக்குமனை விலை தொடர்ந்து குறைந்து கொண்டே செல்கின்றது.

எனினும் தனிவீடுகள், சேர்ந்த வீடுகளின் விலை ஓரளவு நிலையாக உள்ளது. எனினும், குறிப்பிட்ட சில பகுதிகளில் ஆதன விலை இறங்குவதனையும் காணலாம்.

அடுக்குமனை விலையுடன் ஒப்பிடும்போது சாதாரண வீடுகளின் விலை இப்பொழுது சீராக இருப்பதாகக் கொள்ளலாம். எனினும் இதிலிருந்து ஒரு முடிவிற்கு வர முடியாது.

புள்ளிவிவரங்களின்படி, 2016ஆம் ஆண்டில் இருந்து 2022ஆம் ஆண்டு வரையிலான அடுக்குமனைகளின் வியாபாரத்தில் ரொறொன்ரோவில் 58%ஆனோர் முதலீட்டாளர்களாகவும் வன்கூவரில் 50%ஆனோர் முதலீட்டாளர்களாகவும் காணப்பட்டனர்.

இந்தக் கொள்வனவாளர்களில் குறிப்பிடக் கூடியவர்கள் வெளிநாட்டு வாங்குநர்கள். இந்தக் காலப்பகுதியில் மொத்தமான ஆதன கொள்வனவுகளில் ரொறொன்ரோவில் 52%ஆனோர் வெளிநாட்டவர்கள்.

வெளிநாட்டவர்கள் ஆதனங்களை கொள்வனவு செய்வதற்கு வசதிசெய்ய ஆதனங்களை நிர்மாணம் செய்து விற்கும் நிறுவனங்கள் (Builders) மத்திய அரசை நிர்பந்திக்கின்றன. இதனால் அடுக்கு மனை வியாபாரம் அதிகரிக்கலாம் என Builders எதிர்பார்க்கின்றனர்.

ஆனால், ஆதன வியாபாரத்தில் பாண்டித்தியம் பெற்றவர்களும் அரசில் ஆதனம் சம்பந்தமாக தொழில் புரிபவர்களும் இதனை எதிர்ப்பதனையும் காணலாம். வெளிநாட்டவர்கள் ஆதன முதலீட்டில் இறங்கினால், ஆதன விலை மீண்டும் அதிகரிக்கலாம் எனவும் இதனால் உள்ளூர் கனடியர்கள் ஆதனம் வாங்குவதில் மீண்டும் நெருக்கடி ஏற்படலாம் என தமது ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

எனினும், Buildersஇன் எண்ணப்படி உயரம் குறைந்த வீடுகள் (Low Rise) இன் விலை ஓரளவு மிக்குறைந்த விலையை அடைந்துவிட்டதாக எண்ணுகின்றனர். ஆனால், அடுக்குமனை அலகுகளின் விலை இன்னமும் இறங்கு முகமாகப் போவதாகக் கூறுகின்றனர்.



இதற்காகவும் வெளிநாட்டவர் வாங்குவதற்கு தடுத்துள்ள சட்டத்தை நீக்கும்படி கனடியப் பிரதமர் திரு. மார்க் காணியை கேட்கின்றனர்.

கட்டப்பட்டு, ஓரளவு முடிந்த நிலையில், இந்த வருடமும், அடுத்த வருடமும் சந்தைக்கு வரஇருக்கும் மேலதிக அடுக்கு மனைகளால் விலையிலும், வாடகைக்கு கொடுப்பதிலும் மேலும் இலகுதன்மை (Softness) இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு முற்றாக வேறுவிதமான ஒரு நிலைமையும் ரொறொன்ரோவில் மேற்கு பகுதியில் அண்மையில் நடந்துள்ளது. ஐந்து வீடுகளை தொடர்ச்சியாகக் கொண்டுள்ள மனைத்தொகுதியில் (TownHomes) ஒரு கரையில் உள்ள (End Unit) 1600 சதுர அடி வீடு $849,900இற்கு சந்தைப்படுத்தப்பட்டது. எனினும், விற்கும்-வாங்கும், நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்பாக இந்த வீடு $110,000 அதிகமாக ஒரு இளம் தம்பதியினரால் கொள்வனவு செய்யப்பட்டது. இதற்கு தம்பதியினரினால் காரணம் கூறப்பட்டவை தகுந்த இடத்தில் ஆதனம் அமைந்துள்ளதால் தாம் அதிக பணம் கொடுத்து வாங்கியதாகத் தெரிவித்துள்ளனர். அதாவது ஆதன வியாபாரத்தில் Location மிகமிக முக்கியமானது.

எனது அனுபவத்தில் இன்றைய காலத்தில் 2022 மார்ச் மாதத்திற்குப் பிற்பாடு அதிக விலை இறக்கத்தை ஏற்படுத்திய பகுதியாக GTAஇற்கு வெளியேயும், GTAஇன் எல்லைப் பகுதிகளிலேயும் காணப்படுகிறது. எனவே ஆதன வியாபாரத்தில் முக்கியமாகக் கொள்ள வேண்டியது, ஆதனம் அமைந்துள்ள பகுதி (Location – Location – Location). தகுந்த இடத்தில் ஆதனம் கொள்வனவு செய்வதால் எதிர்காலத்தில் அதிக விலை ஏற்றத்தை எதிர்பார்க்கலாம்.

## முறைகேடாக...

7ஆம் பக்கத்தொடர்ச்சி

வாக்காளர்கள். ஓர் அறை கொண்ட வீட்டில் மட்டும் 80 பேர்கள். ஆனால், நிஜத்தில் அந்த 80 பேருமே அந்த வீட்டில் வாழவில்லை. இதுபோல் விலாசங்களே இல்லாத வாக்காளர்கள் பல ஆயிரம் பேர். அதேபோல ஒரே வாக்காளர் பல பூத்துகளில் சேர்க்கப் பட்டிருந்தார். அவர்களில் சிலர், மஹாராஷ்ட்ராவிலும் உத்திரப் பிரதேசத்திலும் இருப்பதாக தேர்தல் ஆணையத்தின் தகவல் பலகையே சொல்கிறது. முதன் முறை வாக்காளர்கள், தங்கள் பெயர் விடுபட்டிருந்தால், தேர்தல் நாளன்று சென்று Form-6 என்னும் படிவத்தை உபயோகித்து வாக்களிக்க முடியும் என்றொரு வழி இருக்கிறது. ஆனால், மகாதேவ்புரா தொகுதியில் 2024 தேர்தலில் இந்தப் படிவத்தை உபயோகித்து வாக்களித்தவர்கள் பெரும்பாலும் 65, 75 வயது முதியவர்கள். மிக முக்கியமாக ஒருவர்கூட, 18-23 வயதுக்குள் இல்லை. இப்படி பல்வேறு வகைகளில், ஏறத்தாழ 6 லட்சம் வாக்காளர்கள் இருக்கும் மகாதேவ்புரா தொகுதியில், 1 லட்சத்துக்கும் மேல் போலி வாக்காளர்கள். கிட்டத்தட்ட 15%. ராகுல் காந்தி ஆதாரங்களையும் வெளியிட்டுள்ளார்.

அண்மையில், பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியலை சீர் செய்கிறோம் என தேர்தல் ஆணையம் எடுத்த நடவடிக்கையில், மொத்தம் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம், பீகார் வாக்காளர் எண்ணிக்கை 8% குறைந்திருக்கிறது. இந்த நீக்கம் பெரும்பாலும் முஸ்லீம்கள் அதிகம் வாழும் மாவட்டங்களில் நிகழ்ந்திருக்கிறது. இந்தியத் தேர்தல்களில், 4-5% வாக்குகள் மாறுவதே பெரும் மாற்றங்களை உருவாக்கும் சூழலில், 8% வாக்காளர்கள் அகற்றப்பட்டிருப்பது சாதாரண விடயமல்ல.

கேள்வி: தமிழ்நாட்டிலும் வாக்குப் பதிவில் முறைகேடு நடந்துள்ளதா?



பதில்: ஆமாம், இந்தியா முழுக்க நடந்ததைப் போல தமிழ்நாட்டிலும் பாஜக பெற்றதில் கணிசமான வாக்குகள் போலி வாக்குகள். இங்கேயும் வாக்குத் திருட்டு நடந்துள்ளது. இல்லையென்றால், ஒற்றை இலக்க வாக்கு வங்கிகூட இல்லாத பாஜக எப்படி பல தொகுதிகளில் இரண்டாம் இடம் வரமுடியும்.

கேள்வி: அடுத்து என்ன நடக்கும் என நினைக்கிறீர்கள்?

பதில்: இந்தியத் தேர்தல் ஆணையம் என்பது தன்னாட்சி பெற்ற நிறுவனம் என்றாலும், அதன் முக்கிய கடமை, தனது பணிகளை வெளிப்படையாக வைத்திருப்பதாகும். உலகம் முழுவதும் ஆட்சியிலும் நிர்வாகத்திலும் வெளிப்படைத்தன்மை நோக்கி நகர்ந்துகொண்டு இருக்கும் நிலையில், இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியும் அதற்கு சாதகமாக இருக்கும் சூழ்நிலையில், எல்லாவற்றையும் மூடி மறைக்கும் இந்திய தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கை, முறைகேடுகள் வெளியே வந்துவிடும் என்ற அதன் அச்சத்தையே காண்பிக்கிறது. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள், மக்களாட்சியின் முன் மிகப்பெரும் அபாயமாக எழுந்துள்ளன. ராகுல்காந்தி சொல்வதுபோல், வாக்குத் திருட்டுமூலம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என்னும் நிலையில், ஆட்சியாளர்கள் மக்கள் பிரச்சினைகளைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை. மக்கள் வாழ்ந்தாலும் இறந்தாலும் கஷ்டப்பட்டாலும் அவர்களுக்கு அது ஒரு பொருட்டல்ல. ஏனெனில், ஆட்சியாளர்களுக்கு மக்கள் வாக்கு தேவையில்லை. மக்கள் வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும், மக்கள் வாக்குகளைத் திருடி அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்து விடுவார்கள்.

**WESTNEY & TAUNTON**
1 Bedroom with attached wash room for rent in main floor. 1 Bed room with attached washroom for rent in a bsmt. Female only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.846.8394**

## ROOM FOR RENT
**MIDLAND & LAWRENCE**
1 Bedroom with sep washroom for rent in a 2 bedrooms bsmt. Sep. entrance & 1 Parking. Male only. Close to all facilities. No pets & No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.646.6806**

## HOUSE /BASEMENT FOR RENT
**MIDDLEFIELD & FINCH**
3 Bedrooms main floor & 1 Bed room bsmt for rent. Sep. entrance & sep. laundry. Near GTA Square. family preferred. Avail. immediately.
**416.666.1374/647.239.7624**

## HOUSE FOR RENT
**KENNEDY & ELLESMERE**
3 Bedrooms house main floor for rent. 2 Parking. No pets. Close to all facilities. Avail. November 01, 2025.
Contact: **647.333.8019**
**email:** sivatheepanm@gmail.com

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
2 Bedrooms for rent in an apart ment. Sharing washroom & kitchen. Close to all facilities. In front of Wood side mall. Rent $700 each room.Including utility. Working people preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.424.0702**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom for rent in a main floor. Male preferred. Close to TTC, UofT, shopping mall & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.274.7088**

## HOUSE /ROOM FOR RENT
**ROSSLAND & AUDLEY - AJAX**
3 Bedrooms house main floor for rent. Parking & laundry. Walking distance to bus route, school & other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.356.4036**

## HOUSE FOR RENT
**BRIMLEY & BRIMORTON**
3 Bedrooms & 1 washroom main floor for rent. 2 parking. Close to STC & school. 2 Minutes walk from bus stop. Family preferred. Avail. immediately
தொடர்புகளுக்கு: **416.919.8441**

## ROOM FOR RENT
**NEILSON & SHEPPARD**
1 Bedroom for rent in main floor. Girls only. 5 Min. walking distance to TTC. Close to Malvern Mall & school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.309.0925**

## ROOM FOR RENT
**HARMONY & TAUNTON**
**OSHAWA -** 3 Rooms with sep. washrooms for rent in a house. 2 people can share one room. Close to university, bus stop & all facilities. Avail. Sept. 20, 2025.
தொடர்புகளுக்கு: **647.328.1545**

## HOUSE & BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES**
3 Bedrooms house & 1 Bed room bsmt full house for rent. 2 Bedrooms bsmt also available. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.662.9935**

## HOUSE FOR RENT
**MIDDLEFIELD & MCNICOLL**
3 Bedrooms with 1 parking house for rent. Short term/ Long term rental available. Avail. November 01, 2025.
**647.774.6599/416.420.1309**

## ROOM FOR RENT
**MARKHAM & BUR OAK**
1 Bedroom with attached wash room for rent in upstairs. Close to Mount joy go station & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.669.8711**

## ROOM FOR RENT
**KINGSTON & LAWRENCE**
1 Bedroom for rent in a main floor. Parking. Close to bus stop & all facilities. Rent $700 Utility included. Avail immediately.
**416.458.4581/416.984.6737**

## HOUSE & BASEMENT FOR RENT
**MCCOWAN & ELLESMERE**
3 Bedrooms house main floor for rent. 1 Parking
**PHARMACY ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.640.5182**

## HOUSE FOR RENT
**WARDEN & HWY 401**
3 Bedrooms & 1 washroom house for rent. 2 Parking. 1Min. walk to bus stop. Close to all facilities. Avail. October 01, 2025.
**416.414.0439/647.740.8181**

## APARTMENT FOR RENT
**MORNINGSIDE & ELLESMERE**
3 Bedrooms apartment for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
**416.818.3327/416.818.1542**

## ROOM FOR RENT
**LAWRENCE & BELLARMY**
1 Private room or sharing room for rent in a main floor. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.949.6204**

## HOUSE/BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## HOUSE FOR RENT
**BRIMLEY & LAWRENCE**
3 Bedrooms & 1 washroom main floor for rent. 2 parking & sep. laundry. Behind SP Importers. Close to Bus stop. Working family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.706.7973**

## APARTMENT FOR RENT
**BRIMLEY & EGLINTON**
1 Bedroom, 1 Bathroom Apt. Included: Heat, AC, Water & Laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**647.980.5562**

## ROOM FOR RENT
**WARDEN & LAWRENCE**
1 Bedroom for rent in a 2 Bed rooms brand new bsmt. Sep. entrance. Close to TTC & all facilities. Avail. immediately.
**416.333.5495/416.569.0657**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedrooms for rent in upstairs. Female only. In front of bus stop. Close to all facilities. Avail. September 01, 2025.
**647.231.2637/647.766.7089**

## OFFICE SPACE FOR RENT
**MARKHAM & FINCH- SCABOROUGH**
**MAIN & QUEEN ST. - BRAMPTON**
Office rooms for rent. Suitable for professional offices & Meeting Space /Medical Clinic/ Educational Classes. Evening 5Pm-10Pm (Week days) & weekends class rooms for rent.
**416.918.9848/416.857.7603**

## HOUSE FOR RENT
**TAPSCOTT & FINCH** - 3 Bedrooms & 3 washrooms house for rent. Rent $2,900+ Utility
**MARKHAM & SHEPPARD-** 3 Bedrooms & 3 washrooms house Rent $2,900+ Utility. Fear of God familly preferred.
Rooms also available for rent. No alcohol, no pets & no smoking. Avail.immediately.
**647.507.2148/647.864.1051**

## HOUSE & BASEMENT FOR RENT
1. **MORNINGSIDE & MCLEVIN -** 4 Bedrooms & 2 washrooms house.
2. **SCARBOROUGH -** 3 Bedrooms & 2 washrooms house & 2 Bedrooms bsmt
2. **MARKHAM & STEELES -** 4 Bedrooms & 3 washrooms house & 2 Bedrooms bsmt for rent.
3. **PICKERING (WHITES & TAUNTON) -** 4 Bedrooms & 3 washrooms house & 1 Bedroom bsmt for rent.
4. **AJAX -** 4 Bedrooms & 3 washrooms house & 2 Bedrooms bsmt for rent.

தொடர்புகளுக்கு: **647.850.7831**

## MATH TUTORING

**FINCH & MORNINGSIDE**

By a well - qualified and experienced lady teacher for all grades from Grade 3 to 12

**Contact by text message**

**416.525.6662**

## WALK IN CLINIC

**DR.U.SOMASUNDARAM**

Family Physician

1200 Markham Road, Unit No.115
Scarborough, ON M1H 2Y9

**T: 416.439.8085**

**Open Hours - Monday - Friday**
**9:00Am - 7:00 Pm**

## திருமண சேவை

கனடா மற்றும் இலங்கையில் வாழும் பொருத்தமான மணமக்கள் எம்மிடம் உண்டு.

தொடர்புகளுக்கு: **437.849.9619**

## பராமரிப்பாளர் தேவை

**Brampton**இல் உள்ள வீட்டில் வாழும் வயதான பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து முழுநேரமாகப் பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு: **416.951.6575**

## வேலைக்கு ஆட்கள் தேவை – FULL TIME / PART TIME

**CHEF, LINE COOK**

**QUEEN & LESLIE**இல் அமைந்துள்ள **THAI Restaurant** ஒன்றிற்கு **Chef, line Cook** போன்ற வேலைகளிற்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம்.

**Call: 416.220.9179 Email: chadsenagroup@gmail.com**

## V MOVE & DELIVERY

உங்களின் சிறியளவிலான மற்றும் பெரிய அளவிலான உள்ளூர் மற்றும் வெளியூர் **Toronto - Montreal/ OTTAWA moving** தேவைகளுக்கு

அழையுங்கள்.

**416.277.4245**



## CAR FOR SALE

2008 TOYOTA YARIS for sale. Automatic. 228,000 Kilo meters. Good condition & A/C

2006 TOYOTA PRIUS Hybrid. 284,000 Kilo meters.

தொடர்புகளுக்கு: **416.688.8364**

## வேலைக்கு ஆட்கள் தேவை – FULL TIME

**COOK, KITCHEN HELPER & CASHIER**

**MARKHAM & STOFFVILLE**இல் அமைந்துள்ள இலங்கை தமிழ் உணவகம் ஒன்றிற்கு **Cook, kitchen helper & Cashier** போன்ற வேலைகளிற்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. **Cashier** வேலைக்கு பெண்கள் விரும்பத்தக்கது.

**Please Call: 416.999.3878**

## RECEPTIONIST & SALES PERSON

**MARKHAM & SHEPPARD** பகுதியில் உள்ள Ideal Stairs Showroom ஒன்றிற்கு Receptionist மற்றும் Sales personஆக தொழில்புரிவதற்கு ஒருவர் தேவை. (Weekend)

**Requirement -** Excellent Communication skills in English, Able to do Marketing & Office Maintenance.

தொடர்புகளுக்கு: **416.830.3932**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.







## படித்ததில் பிடித்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.

அனுப்புங்கள் Vlambaram@sympatico.ca

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!



1896ஆம் ஆண்டில், மின் விளக்கைக் கண்டுபிடித்த சிறந்த கண்டுபிடிப்பாளரான தோமஸ் எடிசன், தனது நிறுவனத்தில் ஓர் இளைஞன் ஒரு சோதனைக் காரை உருவாக்கியதை அறிந்தபோது, கார் வடிவமைப்பில் ஈடுபட்டிருந்தார். எடிசன் இந்த இளைஞரான ஹென்றி ஃபோர்டை நியூயோர்க்கில் ஒரு நிறுவன விருந்தில் சந்தித்தார். மேலும் அவரது பெட்ரோலில் இயங்கும் கார் யோசனையால் முழுமையாக ஈர்க்கப்பட்டார். மின்சாரத்தை ஒரு சக்தியாகக் கருதிக்கொண்டிருந்த எடிசன், "இளைஞனே! அதுதான் விஷயம், உன்னிடம் இருக்கிறது. நீ ஏதோ ஒன்றில் இருக்கிறாய் என்று நினைக்கிறேன். உன் முயற்சிகளைத் தொடர நான் உன்னை ஊக்குவிக்கிறேன்" என்று ஃபோர்டை உற்சாகமாக ஊக்கப்படுத்தினார்.

மரியாதைக்குரிய கண்டுபிடிப்பாளரால் ஊக்குவிக்கப்பட்ட ஹென்றி ஃபோர்ட் தனது வேலையைத் தொடர்ந்தார். இறுதியில் ஒரு காரைக் கண்டுபிடித்தார். அது அவரை பணக்காரர் ஆக்கியது.

டிசம்பர் 09, 1914இல், எடிசனின் ஆய்வகமும் தொழிற்சாலையும் தீயில் அழிக்கப்பட்டன. 67 வயதில், காப்பீடு செய்ய முடியாத அளவுக்கு சேதம் அதிகமாக இருந்தது. சாம்பல் குளிர்வதற்குமுன், ஹென்றி ஃபோர்ட் எடிசனிடம் $750,000இற்கான காசோலையைக் கொடுத்தார், மேலும் தேவைப்பட்டால் எடிசன் இன்னும் அதிகமாக வைத்திருக்கலாம் என்ற குறிப்பு இருந்தது.

1916ஆம் ஆண்டில், ஃபோர்ட் தனது வீட்டை எடிசனுக்கு அடுத்ததாக மாற்றினார். எடிசன் பின்னர் சக்கர நாற்காலியில் அடைத்து வைக்கப்பட்டபோது, ஃபோர்டுக்கும் ஒரு சக்கர நாற்காலி கிடைத்தது, அதனால் அவர்கள் ஒருவரையொருவர் பந்தயத்தில் ஈடுபடுத்தினர்.

தாமஸ் எடிசன் ஹென்றி ஃபோர்டை தன்னை நம்பும்படி செய்தார். வாழ்க்கைக்கான நட்பை உருவாக்கினார்.

**பாடம்:** மற்றவர்களின் வெற்றியைக் கண்டு பொறாமை கொள்ளாதீர்கள். உங்களால் பந்தயத்தில் வெற்றிபெற முடியாவிட்டால், உங்கள் முன்னால் இருப்போருக்கு சாதனையை முறியடிக்க உதவுங்கள். உங்கள் மெழுகுவர்த்தி மற்றொன்றை ஏற்றி அதன் ஒளியை இழக்காது. ஒருவரையொருவர் ஆதரித்து உயர்த்துவதற்கான இந்த உதாரணத்தைப் பின்பற்றுவோம்! - கலையரசி

Vlambaram -September 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-09-14 6:47 PM Page 17



Watson Property Management
WPM
We Pro-Manage your Properties!
FREE
FOR CONSULTATION/ SUGGESTIONS!
416 284 9999

MANAGING OVER 100 PROPERTIES ACROSS VARIOUS CITIES AND TOWNS WITHIN A 2-HOUR RADIUS OF TORONTO.

WATSON PROPERTY MANAGEMENT

About Us
With 30 years of experience in real estate, we proudly manage over 100 properties for diverse landlords, including:
✔ Foreign property owners
✔ Multi-property investors
✔ First-time buyers looking to maximize their property Value
We ensure cost-effective and hassle-free property management, handling everything from marketing to maintenance.




AJAX
BRAMPTON
BOWMANVILLE
BEAVERTON
COURTICE
ETOBICOKE
KESWICK
KINGSTON
MARKHAM
VAUGHAN
STOUFFVILLE
KITCHENER
MISSISSAUGA
NORTH YORK
OSHAWA
PICKERING
SCARBOROUGH
TORONTO
TRENTON
WHITBY
WATERLOO
NIAGARA
NEWCASTLE
RICHMOND HILL

Our Services
Effective Marketing - Maximize property exposure.
Affordable Maintenance - Trustable handymen with cost effective repairs.
Property Showings - Find the right tenants.
Market Updates - Stay informed on property value.
Tenant Screening - Secure reliable and responsible renters.
Lease Renewals & Rent increase - Maximize rental income.
Lease Preparation - Handle all paperwork.
Financial Reports - Year-end accounting for tax purposes.
Move-in Assistance - Stress-free key handovers.
Legal Notices & Paralegal Support - Professional paralegal guidance.
Rent & Utilities Collection - Timely payments guaranteed.
Move-out Management - Key collection and final walkthroughs.
Regular Inspections - Regular walkthroughs every 6 months.

We're Expanding & Hiring!
As we CONTINUE TO GROW and serve more areas, we're looking for reliable handymen to join our trusted maintenance NETWORK.
If you're a skilled handyman OR know someone who is we'd love to hear from you! WE'D love to work together.
REACH US @: 416 284 9999

# கவிஞர் கண்ணதாசனின் "கவிஞன் நான் ஒரு காலக்கணிதம்" ஓர் மெய்யியல் நோக்கு



**K. ANANTHANATHAN,**
MA, MSW, RSW (Registered Social Worker with OCSWSSW)
kananthan2003@gmail.com

## கடந்த இதழ் தொடர்ச்சி...

"வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந்தருவேன்" - நான் அறிந்த இன்பங்களை, சுவைகளை, ஊர் அறியுமாறு இலக்கியங்களில் தருவேன்.

"பண்டோர் கம்பன், பாரதி, பாரதிதாசன் சொல்லாதன சில சொல்லிவிட முனைவேன்" - ஒழுக்கத்தை ஓம்பிய கம்பனும் விடுதலையைப் பாடிய மகாகவி பாரதியும் சமூகத்தைப் பாடிய பாரதி தாசனும் சொல்லாத சில கருத்துகளை என் கவிதைகளில் சொல்ல முயல்வேன்.

"புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக்காது" "இகழ்ந்தால் என் மனம் இறந்துவிடாது! - வளமார் கவிகள் வாக்குமூலங்கள் இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு." புகழ்ச்சி களைக் கண்டு பெருமிதத்தால் என் உடல் புல்லரிக்காது. என்னை இகழ்ந்தால் அதற்காக என் மனம் சோர்ந்து இறந்து விடாது. நான் சொல்கின்ற கருத்துகள் (கவிதைகள்) எல்லாமே என் வாக்கு மூலங்கள். ஒரு குற்றவாளி தன் வாக்கு மூலத்தால் எவ்வாறு தன்னுடைய குற்றங் களை ஒப்புக்கொள்கிறானோ அவ்வாறு தான் என்னுடைய குற்றங்களை அனுபவங் களை ஒப்புக்கொள்கிறேன் என்கிறார்.

"இறந்த பின்னாலேயே எழுதுக தீர்ப்பு! - அவற்றைக்கொண்டு என் இறப்பின் பின்னால் நல்லவனா? தீயவனா? சான்றோனா? கயவனா? என்பது குறித்துத் தீர்ப்பு எழுதிக்கொள்ளுங்கள்.

"கல்லாய் மரமாய் காடுமேடாக மாறாதிருக்க யான் வனவிலங்கல்லன்!" "மாற்றம் எனது மானிடத்தன்மை." தத்துவம் மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!" - கல்லைப்போல, மரத்தைப் போல, காட்டைப்போல மலையைப் போல என்றும் மாறாது நிலையாய் இருக்க நான் வனவிலங்கு அல்லன். (மனித மனம் என்பது ஆசையின் வழி ஒன்றை விட்டு ஒன்று தாவித்திரியும் என்கிறார் கவிஞர். "மனிதமனம் ஒரு குரங்கு" என்னும் கவிஞரின் பாடலோடு ஒப்பிடுதல் வேண்டும். (குரங்குபோல மனிதமனம் அலையக் கூடியது என்கிறார்.) (தனது கட்சி மாறுதலை கவியரசு குறிப்பிட்டாரோ தெரியவில்லை.)

"மாற்றம் எனது மானுட தத்துவம்" - மாற்றம் ஏன்? ஒன்றைத் தவிர மற்ற அனைத்துமே மாறக்கூடியது என்பதே என்னுடைய வாழ்க்கைத் தத்துவம்" "மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!" மாற்றத்தால் உயிர்த்திருக்கின்ற இந்த உலகத்தின் மகத்துவம் அறிவேன்."

"எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை என்பதறிந்து ஏகுமென்சாலை" எவை எவை தீமை, எவை எவை நன்மை என்பவற்றை அறிந்து ஒழுகுவது என் வாழ்க்கைப் பயணம்.

"தலைவர் மாறுவர் தர்பார் மாறும். தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்." இவ்வுலகில் தலைவர்கள் மாறுவர், ஆட்சி யும் (தர்பார்) அரசுகளும் மாறும் இயல்பு உடையவை என்கிறார். தத்துவம் மட்டுமே அட்சயபாத்திமாய் என்றும் வீற்றிருக்கும். (அட்சயபாத்திரமென்பது அள்ள அள்ளக் குறையாத அமுதத்தைக் கொடுக்கும் பாத்திரம் என்கிறார் கவியரசு-மணிமேகலை) எனவே இவ்வுலகில் தலைவர்கள் மாறுவர், ஆட்சியும் மாறும் இயல்புடை யது. என் தத்துவங்கள் மட்டுமே அட்சய பாத்திரமாய் என்றும் வீற்றிருக்கும் என்கிறார் கவியரசு. அரசியல் அறத் தத்துவங்கள் என்றும் எம்மை வழிப்படுத்த இருந்துகொண்டே இருக்கும் என்கிறார்.

கடைசியாக என்ன கூறுகிறாரென்றால் "கொள்வார் கொள்க - குரைப்போர் குரைக்க!" என் கருத்துகளை ஏற்றுக் கொள்வோர் ஏற்றுக்கொள்க. (குரைப்போர் - தூற்றுதல்). என்னைக் குறைகூறுவோர் குறைகூறுக. சுருக்கமாக என்ன கவியரசு கூறுகிறார் என்றால் போற்றுவோர் போற்றுக - தூற்றுவோர் தூற்றுக - நான் துணிந்து என் கருத்துகளைக் கூறுவேன் என்கிறார்.
"உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது"- ஒருவேளை நீங்கள் என்னை இகழ்ந்தால் உங்களுடைய வாய் வார்த்தைகள் என் உடலைத் தொடாது.

"நானே தொடக்கம். நானே முடிவு - நானுரைப்பது தான் நாட்டின் சட்டம்". என்னுடைய இலக்கியப் பயணத்தில் என் கவியரசில் நானே தொடக்கம், நானே முடிவு, நான் சொன்ன கருத்துகள்தான் நாட்டின் சட்டம்" இப்பாடல் கவியரசு கண்ணதாசனின் வாழ்க்கையைக் கிட்டத் தட்ட சொல்வதையே நாம் கண்டோம்.

பாட்டாளிகளுக்காகவும் பஞ்சணையில் தூங்கும் காதலர்களுக்காகவும் கவிதை இயற்றியவர் கவியரசர். அர்த்தமுள்ள இந்துமதம், யேசு காவியம் எழுதிய மத சமத்துவவாதி. பதவிவரும்போது பணிவும் வரவேண்டும் கொள்கையைப் பாடியவர். கவியரசின் கருத்துகளை மதிப்போம். கவிதைகளை இரசிப்போம். அவரது தத்துவக் கருத்துக்களை பின்பற்ற முயல்வோம்.

மேலே நான் குறிப்பிட்ட கவியரசின் இரண்டு தனிப்பாடல்களும் அதாவது "கவிஞன் யானோர் காலக்கணிதம்" என்பதும் 'அனுபவம்' என்றால் என்ன என்பதும் "ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு" என்னும் சினிமாப்பாடலும் கவியரசின் முழுவாழ்வையையுமே பிரதிபலிக்கும் பாடல்களாகும்.

(இக்கட்டுரை கவியரசின் 98ஆவது பிறந்தநாள் சிறப்புக் கட்டுரையாகும்).

Vlambaram -September 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-09-14 6:47 PM Page 18



# புரட்சிக் கவிஞனைப் போற்றி மகிழ்வோம்! – மகாகவி பாரதியார் (டிசெம்பர் 1882 – 11 செப்ரெம்பர் 1921)



கலைமகளே பாரதியின் காதல் தெய்வம்
கவிதையென்றால் அவனுக்கோ வற்றா ஊற்று!
விலையறியா இலகுநடை எளியோர் போற்றும்
வித்துவத்தில் மலர்ந்துவிட்ட புரட்சிப் புதுமை!
அலைகொஞ்சும் மணிகளைப்போல் அருஞ்சொற்கூட்டம்
அவன்நாவில் ஏவலுக்கு இரங்கி ஏங்கும்!
நிலைகொண்டு தமிழ்வாழும் நிமிடம் மட்டும்
நீழாயுள் கொண்டதன்றோ பாரதி பாடல்!

பொன்னேட்டுக் கவியேறு காளி தாசர்
புவிபோற்றும் கவியின்பம் தந்த கம்பர்
பின்னாலே எழுந்தகவி பாரதி யாரும்
பிராமணர்கள் எதிர்ப்பெல்லாம் தாண்டி யன்னார்
பன்நாட்டுப் பாவலர்கள் வியந்து போற்றப்
பாவாலே சாதிவெறி கொண்டோர் நாண
என்நாட்டு மக்களெலாம் என்சோ தரரென
இனவெறிக்குச் சாவுமணி அடித்தவன் அன்றோ?

புதுமைமிகு பலகருத்தைப் புவிக்குத் தந்து
புலமைமிகு கவிகளினாற் கனலெ ழுப்பி
எதுவரினும் அஞ்சேலென் றெழுந்து பெண்கள்
எழுத்தறிவு பெற்றென்றும் விழிப்பு ணர்வொடு
கதுமைபெற்றே ஆண்களுக்குச் சரிநிக ராகக்
காசினியில் கேண்மையொடு வாழ வேண்டிப்
பதுமையிடம் வரங்கேட்டுப் பாவிற் பதித்துப்
பண்பாளன் சமுதாயப் புரட்சி செய்தான்!

வதுவைசெயச் செல்லம்மா கைத்தலம் பற்றி
வாஞ்சையொடு இருமகளிர் பெற்று மகிழ்ந்தான்
விதுப்புமிகச் சுதந்திரப்போர் வீரனாகி
விருப்புடனே சமூகசீர்திருத் தவாசி ஆனான்
மெதுவாகப் புரட்சிசெய்து சிறைக்குஞ் சென்றான்
மேன்மைமிகு இதழாசிரி யராயுந் திகழ்ந்தான்
புதுமைசெயும் நிவேதிதையைக் குருவா யேற்றான்
பொங்கியெழுந்தே விடுதலைக்குக் குரலுங்
கொடுத்தான்!

பத்தியொடு பாடிவைத்தான் கண்ணன் பாட்டு!
பாஞ்சாலி சபதத்தொடு பாப்பாப் பாட்டு!
வித்துவத்தால் வெளிப்பட்ட பகவத் கீதை
விவேகமொடு ஆய்ந்தினிய யோக சூத்திரம்
சித்தமது மகிழ்ந்திடவே செம்மைத் தமிழில்
சீரான மொழிபெயர்ப்பைச் சிறப்பாய்ச் செய்தான்!
முத்துமுத்தாய் தமிழின்மேற் கொண்ட காதலால்
மோகரித்தே அடைமழைபோற் கவிதை படைத்தான்!

பூப்படையாக் குழந்தைகளைத் திரும ணத்தில்
பொருத்திவிடும் கொடுஞ்செயலை எதிர்த்தான்!கைகள்
சேப்படையக் கவியெழுதித் தமிழன் னைக்குச்
செந்தமிழால் ஆரங்கள் சீராய்ச் சூட்டி
நாப்புடைக்கப் பெண்விடுதலைக் காக முழங்கி
நாட்டிலேநற் பேரெடுத்துப் புகழ் விரித்தான்!
மூப்படைய முன்னேமுண் டாசுக் கவியை
மூவாமுதல் தனதடியிற் சேர்த்த தேனோ?

“வேடிக்கை மனிதரைப்போல நானும் நித்தம்
வீழ்வேனென நினைத்தாயோ“? என்று முழங்கி
கோடிக்கணக் கானோரின் நெஞ்சங் களிலே
குயிற்றித்தேச பத்திதனை வளர்த்த பாரதி
கூடியணைத்(து) உணவளித்த யானை தாக்கக்
குறைவடைந்த உடல்நலத்தால் தினமும் வாடிப்
பாடாதன வெலாம்பாடிக் காளி யவள்திருப்
பாதாரவிந் தந்தேடிக் கூடி னானே!.

“வாழ்க்கையைக்கவி யாக்கியோனே கவி”யென் றன்று
வரையறைசெய் திட்டகவி பாரதி அன்றோ?
ஏழ்மையிலே உழன்றிட்டு எதிர்நீச் சலாடி
ஏற்றம்மிகு கொள்கைகளால் இனத்தோர் வெறுக்கத்
தாழ்மையிலே தவித்தானே! இறந்த பின்னர்
தகனஞ்செய மயானம்வரை ஈரேழ் பேர்கள்
காழ்த்தலொடு சென்றசெய்தி கொடுமை அம்மா!
கனைவாகக் கவிதைதந்த கவிக்கா இக்கதி!

இருக்கும்வரை பாரதியின் கவிதைத் திறனை
ஏதலித்தே காதலித்தோர் இருந்த திலையோ?
வருத்தமுற்று அவனுயிரும் பிரிந்த பின்பே
வாகரனும் வடித்துவைத்த கவிதையின் ஆழக்
கருத்துகளை ஆய்ந்தறிந்து கவியின் பெயரால்
கழகமொடு கல்விச்சாலைகளும் அமைத்து
உருப்படியாய் உருவச்சிலை களையும் நிறுவி
ஒருப்பட்டு உலகெல்லாம் நினைவுகூர்கிறதே!

பாரறியப் பாவெழுதிப் புகழ்பெற் றுயர்ந்து
பாரதத்திற் கவிமுத்தாய்த் திகழ்ந் திருந்து
பாரதியைத் தன்நாவில் தினமி ருத்திப்
பாரதிலே பாமரர்க்குத் தோழ னான
பாரதியை மகாகவியாய்ப் பராவி நின்று
பாரதிக்கு இனியவிழா எடுக்கக் கண்டோம்!
பாரதிகம் பேர்கூடி வழுத்தும் வேளை
பாரதிநான் பாவெழுதி மகிழ்கின்றேனே!




அரும்பத விளக்கம்:-
(அரும்பதம் - விளங்குவதற்குக் கடினமான சொல்)
கவியேறு - கவி பொழியும் சிங்கம்
கதுமை - பெருமை
காசினி - உலகம்
கேண்மை - நட்பு - அன்பு உரிமை
பதுமை - காளிதேவி
வதுவை - திருமணம்
கைத்தலம் - கை
விதுப்பு - வேட்கை
நிவேதிதை - சுவாமி விவேகானந்தருடைய ஆன்மீக வாரிசு
மோகரித்தல் - ஆரவாரித்தல்
சேப்படைய - செம்மை அடைய
ஆரங்கள் - மாலைகள்
நாப்புடைக்க - நாக்கு வீக்கம் உண்டாக
மூவாமுதல் - மூப்பில்லாத பரம்பொருள்
குயிற்றி - சொல்லி
பாதார விந்தம் - திருவுடி
தாழ்மையிலே - ஒடுக்கத்திலே
ஏதலித்தே - பெருமையாகப் பேசியே
வாகரன் - கல்வியிற் சிறந்தோன்
காழ்த்தலொடு - உறுதியொடு
கனைவாக - மிகுதியாக
ஈரேழ் - பதின்நான்கு
ஒருப்பட்டு - உடன்பட்டு
பராவி - வணங்கி
பாரதிகம் - பார்! அதிகம்
பாரதியைத் தன்நாவில் - சரசுவதியைத் தனது நாக்கிலே



பல்வைத்திய கலாநிதி
இளமுருகனார் பாரதி

## தமிழரின்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

பெற்றோர் சுலபமாக, சுமையின்றி, விலகி நின்று குதூகலிக்கின்றனர். தமது பொறுப்பு முடிந்து போனதில் திருப்தியடைகின்றனர். திருமண நிகழ்வுகளைப் பற்றிய சரியான விபரங்கள்கூட பல பெற்றோருக்குத் தெரிவதில்லை. சுகமான பொறுப்பு விலகலாகவும் அது அமைகிறது.

திருமணங்களில் உறவினரைவிட நண்பர்களே அதிகம். அவர்களுக்கே முன்னுரிமை. அவர்களது பாடல், கூத்து, கும்மாளம் நிறைந்ததே திருமண வரவேற்பு வைபவம். பெற்றோர் பார்வையாளர்கள்தான்.

பிரத்தியேகமான இடங்களில் (Destination Weddings) திருமணங்கள் ஏற்பாடு செய்யப்படுவது மற்றுமொரு



சிறப்பு. பூந்தோட்டங்களிலும், கடலில் கப்பல்களிலும்கூட இவை நடைபெறுகின்றன.

வாட்ஸ்அப் மூலம் அழைப்பிதழ்களும், கூகுள் வரைபடம் மூலம் கண்டறியப்படும் திருமண மண்டபங்களும் மிகமிகப் பொதுவாகி விட்டன. கணக்கிடப்பட்ட விருந்தினர்கள் மாத்திரமே பங்கேற்பர். சிக்கனம், சீர்மை பேணப்படுகிறது.

தம் பிள்ளைகள் சொல்வதைக் கேட்டும், அவர்கள் செய்யும் திருமண ஒழுங்குகளை ஆமோதித்தும் முரண்பாடு எழாது சுயபாதுகாப்புடன் வாழும் பெற்றோர்களே நல்ல பெற்றோராகி விடுகின்றனர்.

தாயக கிராமிய திருமணங்கள் - சம்பிரதாயங்கள் மறந்து போய்விடும். தாயகத்திலும் நிறுவனமயப்படுத்தப்பட்டு விட்ட திருமணங்கள் புலம்பெயர் தேசங்களில் இளைஞர்களின் ஒன்று கூடலாகவும், உல்லாச நிகழ்வாகவும் மாறிவிட்ட திருமணங்கள் புதிய நகர்வுகள்தான்.

பண்பாட்டை நகர்த்திச் செல்வதில் திருமணத்தின் பொருளாதாரமும், திருமணத்தின் சமூக, பண்பாடும் பெரிய பங்கு வகிக்கின்றன. எங்கள் பண்பாட்டு வரலாற்றில் சில அத்தியாயங்கள் புதியவர்களால், புதிய மாதிரியில் எழுதப்படுகின்றன. புலம்பெயர்ந்த நாற்பதாண்டுகளுக்கு முந்தைய தமிழ் அகதிகள் நிழலாக ஒருபுறம் மறையத் தொடங்கி விட்டனர். அவர்கள் கட்டிக்காத்து வந்த பண்பாடும் மறைகின்றன. பழையன கழிதல்தான் புதுமை.

- தொடரும்

Vlambaram -September 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-09-14 6:47 PM Page 19



# அடையாளம்



Dr. ஃபஜீலா ஆசாத்
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

வாழ்வியல் பட்டறையில் அதிகம் அலசப்படும் ஓர் ஆய்வு 'உங்கள் வாழ்வின் மகிழ்ச்சிக்கு நீங்கள் யாரை முன் மாதிரியாக எடுத்துக் கொள்வீர்கள்' என்பதுதான்.

அதில் முக்கியமாக கேட்கப்படும் கேள்விகள்:

1- நல்ல ஒரு நிறுவனத்தில் சேர்ந்து கடினமாக உழைத்துப் படிப்படியாக உயர் பதவிக்கு வருவோர்
2- சொந்தமாக வியாபாரம் செய்து கஷ்ட நஷ்டங்களைத் தாண்டி ஒரு தொழில் நிறுவனத்தை உருவாக்குவோர்
3- தனி வீட்டில் வாழ்வோர்
4- அடுக்குமாடி குடியிருப்புகளில் வாழ்வோர்.

இப்படி எதிரும் புதிருமான பல விடயங்களைக் குறிப்பிட்டு பதில்களை எழுதச் சொல்வர். இதில் எது சரியான பதிலாக இருக்கக் கூடும் என நீங்கள் கருதுகிறீர்கள். உங்களுக்கு தெரியுமா? இதில் எதையுமே சரியானதென்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்பதே சரியான பதில்.

உண்மையில் மகிழ்ச்சி எதில் உள்ளது என்பது எல்லோருக்கும் பொதுவானது அல்ல. மகிழ்ச்சியாக இருப்பது என்றால் இப்படியெல்லாம் அல்லது இவையெல்லாம் இருக்க வேண்டும் எனும் சமூகத்தின் பொதுவான கோட்பாடே பெரும்பாலானோரை தாங்கள் தோற்று விட்டதாக நினைக்க வைக்கிறது.

அனைவருக்குமே தான் எப்படி இருக்க வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்று ஒரு தனிப்பட்ட கருத்து இருக்கும். சிலருக்கு சொந்தமாக வியாபாரம் செய்யப் பிடிக்கும். சிலருக்கு பெரிய நிறுவனத்தில் வேலை செய்யப் பிடிக்கும். அவரவர்களின் விருப்பத்தைப் பொறுத்து அவர்கள் அதில் மகிழ்ச்சியாக இருப்பர். இதுதான் மகிழ்ச்சியான வேலை என்று பொதுவாக ஒன்றை நிர்ணயிக்க முடியாது. அது ஒருவரின் மனநிலையைப் பொறுத்தே இருக்கிறது.

பொதுவாக இன்றைய காலத்தில் வரையறுக் கப்பட்ட சில விடயங்களே வாழ்க்கையின் வெற்றியாகவும், மகிழ்ச்சி தரக்கூடியவை யாகவும் வலிந்து திணிக்கப்படுகின்றன. மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படும் விடயங்கள் உங்களை அறியாமலேயே உங்கள் ஆழ்மனதில் பதிந்து நீங்களும் அதுதான் சரி என்று நினைக்கத் தொடங்கி விடுகிறீர்கள். இந்த மாயையில் விழாமல் தற்காத்துக் கொள்ளவில்லை என்றால் உங்கள் வாழ்க்கையை, உங்களுக்காக, நீங்கள் விரும்பியபடி மகிழ்ச்சி மிக்கதாக வாழ முடியாமல் போய் விடும்.

உங்களுக்கு வெகு அத்தியாவசியமாகத் தேவைப்படும் ஒன்று வேறு ஒருவருக்கு எந்த பிரயோசனமும் இல்லாததாக இருக்கக் கூடும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அதேபோல் இன்னொரு வருக்குத் தேவையான ஒரு பொருளால் உங்களுக்கு எந்த உபயோகமும் இல்லாமல் இருக்கலாம்.

வாழ்வியலையும் சூழலையும் பொறுத்தே எந்தப் பொருளும் அத்தியாவசியமான தாகவோ அனாவசியமானதாகவோ ஆகிறது. முதலில் உங்கள் தேவை என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

வற்றாத நதிக்கரையில் வாழும் மக்களுக்கு நீச்சல் குளங்களால் என்ன பயன் இருக்கப்போகிறது. இன்று பெரும்பாலா னோர் தங்களின் வாழ்வியல் சூழல் கொண்ட தேவைகளைத் தேடாமல் விளம்பரங்களைப் பார்த்தும் மற்ற மனிதரைப் பார்த்தும் தங்களிடம் உள்ளவற்றை ஒப்பிட்டு யாரோ ஒருவரின் அடையாளத்தை தங்கள் அடையாள மாக்கத் துடிக்கின்றனர். இவர்களுக்கு, தங்களுக்கு என்ன தேவை என்ற தெளிவான பார்வை இருக்காது. அதன்



காரணமாகவே அவர்கள் வேண்டியது கிடைத்தாலும் அவர்களால் மகிழ்ச்சியாக இருக்க முடிவதில்லை. ஏனென்றால் உண்மையில் அது அவர்களின் தேடலோ விருப்பமோ அல்ல. அது மற்றவரை பார்த்து அதுபோல் தங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற கண் ஆசை மட்டுமே.

அதேசமயம் உங்கள் தேவைகள் என்ன என்பதை புரிந்துகொண்டு அவற்றை அடைவதற்கான கால அளவுகளையும் ஓரளவு கணித்து அதற்கான முயற்சிகளை யும் மகிழ்ச்சியாக அனுபவித்து செய்து கொண்டிருந்தீர்கள் என்றால் உங்கள் மகிழ்ச்சியும் வளர்ச்சியும் ஏறுமுகமாகவே இருக்கும். உங்கள் வாழ்வியல் முறையை மேம்படுத்தும் செயல் என்பது ஒரு செடி மரமாவதைப் போல் இருக்க வேண்டும். அது ஓர் இயல்பான வளர்ச்சி.

மகிழ்ச்சியாக வாழ்வதற்கு உங்கள் வாழ்க்கை முறைக்கு என்ன தேவை, உங்கள் நடைமுறைக்கு எது சாத்தியம் என்ற தெளிவான சிந்தனையே விரயமற்ற நிறைவான மகிழ்ச்சி தரும்.

அது ஸ்பெயின் நாட்டின் தெற்கு மூலையில் உள்ள ஓர் அழகிய கடற்கரை கிராமம். அங்கு பிடிக்கப்படும் இறால் மீன்கள் சுவைக்குப் பேர் பெற்றவை. ஒரு நாள் அங்கு ஓர் அமெரிக்க வங்கி அதிகாரி விடுமுறையை கழிப்பதற்காக வருகிறார். அந்தக் கிராமத்தின் அழகும் அமைதியும் அவரது மனதிற்கு மிகவும் இதமாக இருக்கிறது.

இத்தனை காலம் வேலைப் பளுவால் ஏற்பட்டிருந்த மன அழுத்தமும் சோர்வும் ஓரிரு நாட்களிலேயே விடை பெற்றுச் செல்ல மனதில் நிம்மதி பரவுகிறது. அமைதியாக விடியும் அந்தக் கிராமத்தின் அழகைப் பருகியபடி தினமும் மதிய வேளைகளில் அங்குள்ள கடற்கரைக்குச் சென்று மீன் பிடிக்கச் சென்ற படகுகள் திரும்ப வருவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார். அப்போது அவருக்கு ஒரு விடயம் வினோதமாகப் படுகிறது. அது என்னவென்றால் ஒவ்வொரு நாளும் அந்த மீனவர்கள் பிடித்துக்கொண்டு வரும் மீன்களின் அளவு சற்றேறக்குறைய ஒரே அளவாகவே இருக்கிறது. ஆச்சரியம் அடையும் அவர், ஒரு நாள் அங்கு வரும் மீனவர்களில் ஒருவரிடம் தனது சந்தேகத்தைக் கூறி விளக்கம் கேட்கிறார்.

அதற்கு அந்த மீனவர் அந்தக் கிராமத்தில் இருக்கும் மீனவர்கள் காலையில் மீன் பிடிக்கச் சென்றுவிட்டு மதியத்திற்குள் திரும்பி விடுவர் என்றும் அன்றைய தேவைக்கான அளவு போக அதிகம் மீன்கள் வலையில் மாட்டினால் அவற்றை மீண்டும் கடலிலேயே விட்டுவிடுவர் என்றும் கூறுகிறார். மேலும் மதியத்திற்கு மேல் Siesta எனப்படும் ஒரு சிறு ஓய்வு எடுத்துக்கொண்டு பின் மாலையில் நண்பர்கள் குடும்பத்தினருடன் கலந்துரை யாடிப் பொழுது போக்குவர். இதுதான் காலங்காலமாக இங்குள்ள வாழ்வுமுறை என்று கூறுகிறார். புதிருக்கான விடை இன்னுமொரு புதிரை வினாவாக்கிச் செல்கிறது.

மீனவரின் பதிலால் மேலும் ஆச்சரியமடைந்த அந்த வங்கி அதிகாரி அந்த மீனவரிடம், மேலதிக மீன்களை ஏன் மீண்டும் கடலில் விடுகிறீர்கள். அவற்றை ஏற்றுமதி செய்தால் அதிகம் சம்பாதிக்க லாமே என்று வினவுகிறார்.

அதிகம் பணம் சேர்த்து என்ன செய்வது என்று அந்த மீனவர் கேட்க, இன்னும் பல படகுகள் வாங்கலாம். அதன்மூலம் இன்னும் அதிகமான மீன்களைப் பிடிக்க லாம். அவற்றை ஏற்றுமதி பண்ண ஒரு நிறுவனம் ஆரம்பிக்கலாம். அதன்மூலம் நிரந்தரமான வருமானத்தை ஏற்பாடு செய்து விட்டு நிம்மதியாக நண்பர்கள் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக பொழுதைக் கழிக்கலாம் என்று கூறுகிறார். அதைக்கேட்டு சிரிக்கும் மீனவர். அதைத்தானே இப்போது செய்து கொண்டிருக்கிறேன் என்று கூற அந்த வங்கி அதிகாரி பேச்சற்றுப் போகிறார்.

ஒரேவிதமான பொருட்களோ, ஒரேவிதமான வாழ்க்கை முறையோ அனவருக்கும் பொருந்தாது. அதேசமயம், எந்த ஒரு வாழ்வியல் முறையும் மற்றொன்றை விட உயர்ந்ததோ தாழ்ந்ததோ அல்ல. ஒவ்வொன்றும் அதனதன் வகையில் அதற்கான சிறப்புக்களைப் பெற்றிருக்கிறது. உண்மையில் உங்களுக்கானதல்லாத ஒன்று யாரோ ஒருவரிடம் இருக்கிறது என்பதற்காக அதை அடைவது உங்கள் மனதை மகிழ்ச்சி கொள்ளச் செய்யாது. எத்தனை கடினமான முயற்சிகள் செய்து நீங்கள் அதை அடைந்தாலும் அதனால் எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை. உங்கள் மனம் உங்கள் உண்மையான விருப்பத்திற்கே மகிழ்ச்சி கொள்கிறது. அதுவே ஆத்ம திருப்தி தருகிறது.

எந்த ஒன்றையும் அது கிடைத்தால் மகிழ்ச்சியாக இருக்குமே எனும் ஏக்கம் எழும்போது, அது இல்லாமல் உங்களிடம் இருப்பது எதுவுமே மகிழ்ச்சி தரவில்லையா என உங்கள் மனதிடம் எதிர் கேள்வி கேளுங்கள். இப்படி ஏங்கி கிடைத்தவற்றின் மகிழ்ச்சி எத்தனை நாள் நீடித்தது என சிந்தித்து பாருங்கள். மகிழ்ச்சி என்பது எங்கோ இல்லை என்பதை புரிந்து கொள்வீர்கள்.



Vlambaram -September 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-09-14 6:47 PM Page 20



## Words of Peace

பிரேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
www.timelesstoday.com
www.premrawat.com

வாழ்க்கையில் நம்பிக்கையும் துணிவும் வேண்டும் வெளியுலகத்தில் பல்வேறு செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு இருந்தாலும், எமது வாழ்க்கையிலே என்ன நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது என்பதுதான் முக்கியமான விடயம். எம்முடைய வாழ்விலே நம்பிக்கை இருக்க வேண்டும். வாழ்க்கையில் நம்பிக்கை இல்லையெனில் மனிதன் எவ்வாறு முன்னேறிச் செல்ல முடியும். எமது நம்பிக்கைகள் தவறான விடயங்களிலா, போலியான விடயங்களிலா, கற்பனையான விடயங் களிலா அல்லது உண்மையான விடயங்களிலா உள்ளது. இங்கு குறிப்பிடப் படும் 'உண்மை' என்பது முன்னர் இருந்த, இப்பொழுது இருக்கின்ற, எப்பொழுதுமே இருக்கப்போகின்ற, என்றுமே மாற்றமடை யாத உண்மை ஆகும். இந்த உண்மை, சூழ்நிலையுடன் தொடர்பு இல்லாதது. நீங்கள் உயிருடன் வாழும்வரை அதாவது பிறப்பு இறப்பு எனும் இரு சுவர்களுக்கு இடையில் இருக்கும்வரை உங்களிடம் உள்ள உண்மை.

ஆனால் உங்களிடம் உள்ள உண்மை எவ்வாறானது? என்றும் மாற்றமடையாத அந்த உண்மையை அறிவதனாலும், உணர்வதனாலும் உங்களது வாழ்க்கை யில் நம்பிக்கை ஏற்பட வேண்டும். உங்களைப் பொறுத்த வரையில் இடை விடாது வந்துபோகும் இந்த மூச்சு மட்டும் தான் உண்மை. இந்த மூச்சு உங்களி னுள் வந்து போகும்வரை உங்களிடம் எல்லாமே உள்ளன. உங்களிடம் இல்லாத வற்றையும்கூட இம்மூச்சு வந்துபோகும்வரை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த மூச்சுத்தான் உங்களின் வாழ்வில் எல்லாவற்றையும்விட முக்கியமான விடய மாகும். இந்த மூச்சின்றி நீங்கள் ஒன்றுமே இல்லை, வெறும் உடல்தான். இம்மூச்சு வந்து போவதனால்தான் உங்களுக்கு சொந்தங்கள், பந்தங்கள், உறவுகள், வேலைகள், வீடு, வாசல் மற்றும் எவையெல்லாம் இருக்கின்றதோ அவையெல் லாம் உள்ளன. உங்களது மூச்சு நிற்கும் பொழுது எதுவுமே உங்களிடம் இருக்க மாட்டாது. இத்தகைய மூச்சு உங்களினுள் வந்து போகும்வரை நீங்கள் மிகவும் பாக்கியசாலிகள். நீங்கள் துர்பாக்கிய சாலி என ஒருபோதும் நினைக்க வேண்டிய தேவையில்லை.

வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் தொடர்ந்து வந்து போய்க் கொண்டேதான் இருக்கும். உயிருடன் இருக்கும்வரை நீங்கள் எது வேண்டுமானாலும் செய்ய முடியும். சூழ்நிலை எவ்வாறு இருந்தா லும், உங்களிடம் துணிவும், பொறுமையும் இருக்கவேண்டும். அந்தத் துணிவில் இருந்து நம்பிக்கை பிறக்க வேண்டும். இவைபற்றிய பல கதைகளைப் படித்திருக் கின்றோமே, நம்முடைய வாழ்விலே தைரி யமாக இருக்க வேண்டும் என்பதனைப் புரிந்துகொள்ளக் கூடாதா? துணிவுடன் எம் வாழ்க்கையைக் கொண்டு சென்றோமாயின் எந்தச் சூழ்நிலையையும் எதிர்கொள்ள முடியும், எந்தப் பிரச்சினையானாலும் அதற்கான தீர்வைக் கண்டுகொள்ள முடியும். இந்த மூச்சு வந்துபோய்க் கொண்டிருக்கும்வரை எம்மிடம் அதற்கான தைரியம் இருக்கின்றது. எமது வாழ்க்கையை பயத்திலிருந்து விலக்கி முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியும். மனிதன் பயத்திலிருக்கும்போது அவனால் ஒன்றுமே செய்ய முடியாமல் போகின்றது. வாழ்வில் வெளிச்சத்தைக் காணமுடியாமல் இருக்கின்றது. அவனால் உண்மைப் பொருளை புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது.

நேரம் ஒரே வேகத்தில்தான் ஓடிக் கொண்டிருக்கின்றது. ஆனால் மனிதன் எப்பொழுதும் பதட்டத்துடன் வாழ்ந்து கொண்டிருப்பதனால் அவன் செய்யும் செயல்களால் வாழ்க்கையில் எந்தவித பயனையும் பெறப்போவதில்லை. நேரத்தை வீணாக்குவது போலாகிவிடும். உங்களுக்குக் கிடைத்த இந்த நேரத்தை வீணாக்காமல் துணிவுடன் செயற்படுங்கள். கடந்துசென்ற நேரம் மீண்டும் திரும்பி வரப்போவதில்லை. தீர்வு காண முடியாத விடயம் என்று எதுவுமே இல்லை. நம்பிக்கையுடன் செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும். இந்த சூழ்நிலையில் எமக்குக் கிடைத்த பாடத்தை நாம் என்றும் மறந்துவிடக் கூடாது. நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கும் நேரங்களில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும், பயப் படுவதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும்.

மனம் எப்பொழுதும் சஞ்சலப்பட்டு ஓடிக் கொண்டேதான் இருக்கும். மனம் போன போக்கில் மனிதனும் ஓடிக்கொண்டேதான் இருக்கின்றான். நீங்கள் எங்கு சென்றாலும் எத்தகைய சூழலில் வாழ்ந்தாலும் பறவைகளைப்போல சுதந்திரமாக வாழமுடியும். எந்த சூழ்நிலையிலும் மனதை ஒரு நிலைப்படுத்தி அமைதியாக இருக்க முடியும். இந்த மூச்சு உங்களினுள்ளே வந்துபோகும்வரை அதனைப் புரிந்து கொள்ளுங்கள். அதற்கு மதிப்புக் கொடுங்கள். மூச்சு உங்களுக்கு உயிரைக் கொண்டு வருகின்றது. நேரத்தை எடுத்து வருகின்றது. நீங்கள் எங்கிருந்தாலும் சரி, இப்பிரபஞ்சத்தை படைத்தவர் உங்களின் இதயத்தில் வீற்றிருக்கின்றார். அதனால் நீங்கள் தனிமையை ஒருபோதும் உணர வேண்டியதில்லை. உங்களுக்கு நண்பர் கள் இந்த நேரத்தில் தேவையில்லை. நண்பர்களுக்கெல்லாம் நண்பராக உங்களைப் படைத்தவர் உங்களில் இருக்கின்றார். கடைசி மூச்சு உள்ளவரை உங்களுடனேயே வாசம் செய்வார்.

உங்கள் உள்ளம் சொல்வதை செவி மடுத்துக் கேளுங்கள். எனது வாழ்க்கை யில் நான் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்றுதான் உள்ளம் சொல்கின் றது. உண்மைப் பொருளை உணர்வுடன் இணைத்து ஆனந்தத்தை அடையுங்கள். உண்மை என்றும் உங்களுடனேயே இருக்கின்றது. உங்களிடம் உள்ள புதை யலை அறியாது இருப்பதுதான் துன்பங் களுக்கெல்லாம் மூலகாரணம். உங்கள் வாழ்வில் உண்மையை அறிந்து, அதை ஏற்றுக்கொண்டு வாழும்போதுதான் மனதிலுள்ள குழப்பங்கள் விலகும். அந்த உண்மை நிலையை உணரத் தொடங்கும் பொழுதுதான் நீங்கள் அமைதியாக வாழ முடியும். உள்ளம் அந்த சுதந்திரத்தை விரும்பும், அதனால் வாழ்க்கையில் நன்றி யுணர்வு ஏற்படும். உங்களை நீங்களே அறிந்து கொள்ளுங்கள். வாழ்க்கையை விழிப்புணர்வுடன் வாழுங்கள். உள்ளத்தை நன்றியுணர்வால் நிரப்புங்கள். அப்பொழுது உங்கள் வாழ்வில் பிரகாசம் தோன்றும். தன்னை அறிந்து வாழ்வை வளம் பெறச் செய்யுங்கள். என்றும் ஆனந்தமாக வாழுங்கள், வாழ்கையை வெற்றியடையச் செய்யுங்கள்.

# மாரீசன் – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

இவ்வருடம் ஜுலை மாதம் வடிவேல் மற்றும் பகத் பாசில் (Fahadh Faasil) நடிப்பில் வெளியான படம் மாரீசன்.

இப்படத்தில் தயாளன் (Fahadh) என்ற திருடன் சிறையில் தண்டனை முடிந்து வெளியே வருகிறார். சிறைக்கு சென்றாலும் தனது திருடும் பழக்கத்தை அவர் விடவில்லை.

திருடக்கூடிய பொருட்களை தேடிச் செல்லும் தயாளன், வீடு ஒன்றினுள் நுழைகிறார். அங்கு திருட எண்ணிய தயாளன் திடீரென்று கட்டிப்போட்டு இருக்கும் ஒருவரைக் கண்டுபிடிக்கிறார்.

கட்டிப்போடப்பட்டவர் தனது பெயர் வேலன் (வடிவேல்) என்று கூறி, தனக்கு மறதிநோய் (Alzheimer's) இருப்பதாகச் சொல்கிறார். தனது மறதி நோய் காரணமாக தனது மகன் குமார் தன்னைக் கட்டிப்போட்டுவிட்டு வேலைக்குச் செல்வார் எனக் கூறி, தயாளன் தன்னை விடுவித்து உதவி செய்தால் அவருக்குப் பணம் தருவதாக வேலன் சொல்கிறார்.

தயாளனும், வேலனை விடுவித்து, இருவரும் சேர்ந்து பயணம் ஒன்றைத் தொடங்குகின்றனர். இப்பயணம் எங்கு சென்று முடிவடைகின்றது என இப்படத்தைப் பார்த்து அறியுங்கள். இரு வேறு வாழ்க்கை அனுபவங்களைக் கொண்ட இருவர், குறிப்பாக வயது வித்தியாசமுடையவர்கள், சேர்ந்து பயணம் செல்லும் படங்களின் வரிசையில் இதுவும் ஒன்றாகும்.



இதில் பிரதம கதாபாத்திரங்கள் இருவரின் நடிப்பும் மிகவும் நன்றாக இருப்பதால் படம் சிறப்படைகின்றது. எப்படியாவது வேலனிடம் வங்கியிலிருக்கும் பெருமளவு பணத்தைத் திருட்டுத்தனமாக எடுக்க விரும்பும் தயாளன், வேலனுடன் பழகுவதால் திருடக் கஷ்டப்படுவதும், வேலனின் மறதியால் ஏற்படும் சம்பவங் களும் படத்தை நகைச்சுவையாகவும், விறுவிறுப்பாகவும் சிறப்பாகவும் கொண்டு செல்கிறது.



எளிதான கதையும், நல்ல கருத்தும், சிறப்பான நடிப்பும் பார்வையாளர்களுக்கு பத்தாது என இயக்குநர் எண்ணியதாகத் தெரிகிறது. ஏன் என்றால் படத்தின் இரண்டாம் பாகத்தில் திடீரெனக் கொலை, சிறுமிகளுக்கு எதிரான வன்முறை மற்றும் பழிவாங்குதல் என்ற திருப்பங்கள் கதையில் சேர்க்கப்படுகின்றன. இவை இல்லாமல் படத்தை சுவாரஸ்யமாகவும், அமைதியாகவும் கொண்டு சென்று இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

இருந்தாலும் நாம் நகைச்சுவையாகப் பார்த்துப் பழகிய வடிவேலை வேறு உருவத்தில் இப்படத்தில் காட்டியது நன்றாக இருந்தது. இவ்வாறு வடிவேலின் குணச்சித்திர நடிப்பைப் பார்க்க விரும்புவோர் இப்படத்தைப் பார்க்கலாம்.



## திருக்குறள்

**பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்**
**எண்ணிய தேயத்துச் சென்று. [753]**

செல்வம் என்று சொல்லப்படுகின்ற உண்மையான விளக்கு, தன்னை வைத்திருப்பவர், நினைத்த நாட்டுக்குச் சென்று துன்பம் நீங்கி வாழச் செய்யும்.

**பதவுரை:** பொருள் – செல்வம், என்னும் – என்கின்ற, பொய்யா விளக்கம் – அணையா விளக்கு, அழியாத விளக்கு – இருள் – இருட்டு, அறுக்கும் – ஒழிக்கும், எண்ணிய – நினைத்த, தேயத்து – இடத்தில், சென்று – போய்.